உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 36 | பிங்கள - வைகாசி - 10—6—77 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

மண்டலாபிஷேகக் கிருத்திகை மாண்பு

வேளூரின் விழுப்பம் :

இறைவனுக்குத் திருமஞ்சனம், திருவிளக்கு முதலிய திருப்பணிகளை ஆகம விதிப்படிச் செய்து வழிபடும் தெய்விக நிலையங்கள் திருக்கோயில்கள். நித்திய நைமித்திகம் என்று கூறப்படும் பூசனைகளால் இறைவனை உலக நன்மைக்காக வழிபாடு செய்யும் முறைகள் மிகப்பழமையானவை. நித்திய நைமித்திக வழிபாடுகள் தவறாது நன்முறையில் நிகழும் திருக்கோயில்களில் இறையருள் விளக்கம் பெற்றிருத்தலையும் வழிபாடு நன்முறையில் நிகழாதிருக்கும் திருக்கோயில்கள் விளக்கமில்லாதிருத்தலையும் நாம் காண்கின்றோம். ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் சில சிறப்பு வழிபாடுகள் உள்ளன. அதற்கு எடுத்துக்காட்டாக சப்தஸ்தானம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சோழநாட்டுத் திருத் தலங்களில் புகழ்மிக்க திருத்தலமாகத் திகழும்

வைத்தீசுவரன்கோயிலில் எப்போதும் திருவிழாதான். பக்தர் கூட்டம் திரள் திரளாக வந்து வழிபடும் யாத்திரை ஸ்தலமாக உள்ளது புள்ளிருக்கு வேளூர். தருமையாதீனத்தைச் சார்ந்த இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்றுக உள்ள இத் திருக்கோயிலுக்குப் பல சிறப்புக்கள் உண்டு. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றுலும் சிறந்த இத் திருத்தலத்தில் பிறவிப் பிணி தீர்க்கும் பெருமருந்தாக உள்ள பரமேசுவரன் வைத்ய நாதனுகவும், பராசக்தி தையல்நாயகியாகவும், திருமுருகன் செல்வமுத்துக்குமாரசுவாமியாகவும் இருந்து அருள்வழங்கிவருகின்ருர்கள்.

வைத்தீசுவரன்கோயிலில் திங்கள்தோறும் நடைபெறும் கிருத்திகாபிஷேகம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்யும் சிறப்புடையது. இந்த அபிஷேகத்தில் சந்தனுபிஷேகம் மிக்க சிறப்புடையது. இதுமட்டுமன்று, ஆண்டுக்கொருமுறை இங்கு நிகழும் மண்டலாபிஷேகக் கிருத்திகை வேறு எங்கும் இல்லாத தனிச்சிறப்பு உடையது.

மண்டலாபிஷேகத் தத்துவம் :

மூன்று பட்சங்களைக் கொண்ட நாட்களை மண்டலம் என்று குறிக்கின்றனர். அதனை வடமொழியில் "திரிபக்ஷ யஜனம்" என்று கூறுவர். திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்குப்பின்னர் ஒரு மண்டலம் நிகழ்த்தும் அபிஷேக ஆராதனையே பொதுவாக எல்லாராலும் எல்லா இடங்களிலும் மண்டலாபிஷேகம் என்று கூறப்படுகிறது. ஆனுல் இங்கு மகோற்சவத்திற்குப் பிறகு ஆண்டுக்கொருமுறை நிகழ்த்தும் சிறப்பு வழிபாடே மண்டலாபிஷேகம் என்று குறிக்கப்பெறுகிறது. மண்டலாபிஷேகக் கிருத்திகை வழிபாடு இந்த அடிப்படையிலேயே தொன்று தொட்டு இங்கு நிகழ்ந்து வருகின்றது. சித்திரை மாதத்திற்குச் சித்திரை நட்சத்திரம் சிறப்பு. இதுபோன்று வைகாசிக்கு விசாகம், ஆனிக்கு மூலம்; ஆடிக்கு உத்திரட்டாதி; ஆவணிக்கு அவிட்டம்; புரட்டாசிக்குப் பூரட்டாதி; ஐப்பசிக்கு அசுவனி; கார்த்திகைக்கு கிருத்திகை; மார்கழிக்குத் திருவாதிரை; தைக்குப் பூசம்; மாசிக்கு மகம்; பங்குனிக்கு உத்திரம். இந்தச் சிறப்பு நட்சத்திரம் அந்தந்த மாதத்திலும் பெரும்பாலும் பௌர்ணமியோடு கூடியே வரும். சித்திரை மாதத்தில் பௌர்ணமியுடன் கூடிய சித்திரா நட்சத்திரத்தைஒட்டிய ஹஸ்தநட்சத்திரம் தொடங்கி 45 ஆவது நாள் வரும் கிருத்திகை நட்சத்திரம் சிறப்பான மண்டலாபிஷேகத்திற்குரிய நாளாகும். இந்த நாற்பத்தைந்து நாட்களிலும்

காவிரித் திருமஞ்சனம் கொள்கின்றனர் ஸ்ரீ வைத்தியநாதரும் ஸ்ரீ தையல்நாயகியும் தருமபுரத்திற்கு அருகில் உள்ள காவிரியி லிருந்து திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் எடுத்துச் சென்று ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்தல் மரபு. இந்த நாற்பத்தைந்து நாட்களிலும் மஹாநியாசத்தை முன்னிட்ட ஏகாதச ருத்ராபிஷேகம் செய்வதும் இங்கு மரபாக உள்ளது.

மஹாநியாச ஏகாதச ருத்ர பாராயணம் :

மஹாநியாசம், லகுநியாசம் என்ற இரண்டு முறைகளை முன்னும் பின்னுமாக உடையது ருத்ராபிஷேகம். மந்திரம், கிரியை, பாவனை என்ற முறையினல் மந்திரத்தை வாயினல் உச்சரித்து மந்திர நியாசத்தினல் தன்னுடைய உடலில் தொடு மிடங்களில் தொட்டு (பதித்து) மந்திரப்பொருளை மனத்தால் நினைத்து, உள்ளத்தில் பரமேசுவரனை வணங்கி ஸ்ரீ ருத்ர பாராயணம் தொடங்குதல் வேண்டும் என்று ஆகமம் அறிவுறுத்துகின்றது. இவ்வாறு நியாசத்துடன் மந்திரம் ஜபித்தலே முறை. நியாசம்செய்யாது மந்திரம் செபித்தால் அது ஊமையாகும். (பயனற்றதாகும்) " நியாஸம் விநாபவேன்மூக; " என்பது மந்த்ர சாஸ்திரம்.

இவ்வாறு நியாசம் செய்து மந்திரத்தை ஜெபிப்பவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுதலை அடைந்தவன் ஆகிருன்; தோல் எலும்புகளைப் பற்றிய நோய்களினின்றும் விடுபடுகிருன்; யட்சன் கந்தர்வன், பூதம், பைசாசம், நாய், திருடன் முதலிய துன்பங்களினின்றும் காக்கப்பெறுகின்ருன்; என்று மஹாநியா சத்துடன் கூடிய ஸ்ரீ ருத்ர ஜபத்திற்குப் பயன் கூறப்பட்டிருக் கின்றது. ஜாபாலர், போதாயனர் முதலியமுனிவர்களால் கூறப் பட்ட பயன் இது என்பது குறிக்கொள்ளத் தக்கது.

ஸ்ரீ ருத்ர பாராயண நலம் :

மண்டலாபிஷேகத்தின்போது வேளூரில் நிகழ்த்தப்பெறும் இந்த ஏகாதச ருத்ர பாராயண முறைகளையும் ஆகம பூர்வமான செய்திகளையும் அறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாதது. மகாந்யாச ருத்ராபிஷேகம், ஏகாதச ருத்ரம், ருத்ரைகாதசனி, மஹாருத்ரம், அதிருத்ரம் என்று நான்கு வகையாகச் செய்யப்படுகின்றது. ஸ்ரீ ருத்ரம் 11 அனு வாகங்களை (பிரிவு) உடையது. ஸ்ரீ ருத்ரம் முழுவதும் ஒருமுறை

பாராயணம் செய்து, சமகத்தில் ஒரு அனுவாகத்தைப் பாராயணம் செய்தல் வேண்டும். மீண்டும் ஸ்ரீ ருத்ரத்தை ஒருமுறை பாராயணம் செய்த பின்னர் சமகத்தில் இரண்டாவது அனுவாகத்தைப் பாராயணம் செய்யவேண்டும், இவ்வாறு 11 தடவை ஸ்ரீ ருத்ரத்தையும் ஒவ்வொரு ருத்ர பாராயணந்தோறும் சமகத்தில் ஒவ்வொரு அனுவாகங்களாகப் 11 தடவை பாராயணம் செய்வதே ஏகாதச ருத்ர பாராயணம் எனப்படும். ஏகாதச ருத்ரத்தைப்போல் 11 மடங்கு அதிகம் கொண்டது ருத்ரைகாதசனி; இதைப்போல் 11 மடங்கு அதிகம் கொண்டது மகா ருத்ரம்; மகா ருத்ரத்தைப்போல் 11 மடங்கு அதிகம்கொண்டது அதிருத்ரம் எனப்படுகின்றது. மஹார்ணவம் என்ற நூலில் ஸ்ரீ ருத்ர ஹோம முறைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இவைகளின் ஹோம முறைகளும் த்ரேதா (3) விபாகம், ஷோடா (6) விபாகம், ஷோடசதா (16) விபாகம், அஷ்டா சத்வாரிம் சதிதா (48) விபாகம், ஏகோன சப்த்தத் யதிகசததா (169) விபாகம் என்று ஹோம முறைகள் பலவாக போதாயனர் முதலியவர்களால் கூறப்பெறுகின்றன. ருத்ர ஹோம பூர்த்தியில் வசோர்த்தாரையில் சமகம் கூறப்படுகிறது.

ஸ்ரீ ருத்ரத்தின் சிறப்பு :

வேதங்கள் நான்கு என்று கூறப்படினும் மூன்று என்று கூறுவது மரபாக இருந்து வருகிறது, ரிக், யஜுர், சாமம் என்ற மூன்று வேதங்களையுமே " த்ரயீ " என்று கூறுவர். இம் மூன்றனுள் நடுவிலுள்ளது யஜுர்வேதம். இது நூற்றொருசாகைகளை (பிரிவு) உடையது. இதன் நடுவிலுள்ள சாகை போதாயன சாகை. இது ஏழு காண்டங்களாக அமைந்துள்ளது. இதன் நடுக்காண்டம் (நான்காவது) சதருத்ரீயம் எனப்பெறும். இதன் நடுவிலுள்ள ஐந்தாவது ப்ரஸ்னம் அதில் ‘ நம: சோமாயச ' எனும் அனுவாகத்தின் இருதயத்தில் ‘ நம சிவாயச ' என்னும் பஞ்சாட்சர மந்திரம் (ஐந்தெழுத்து) விளங்குகிறது. இதனால் ‘ பஞ்சாட்சரம் ' எல்லா வேதங்களின் உயிர் நாடியாகவும், சாரமாகவும் அதிரகசியமாகவும் உள்ளது. இத்தகைய மகா மந்திரமாகிய ஐந்தெழுத்தை நடுவில்கொண்ட ஸ்ரீ ருத்ரம் இறைவனுக்கு மிகவும் திருப்தி அளிப்பதாக விளங்குகிறது.

பயன்கள் :

ஸ்ரீ ருத்ர பாராயண ஒமங்களால், பரமேசுவரனிடத்தில் வேண்டியவற்றையெல்லாம் தொகுத்துப் பிரார்த்தித்துக்

கொள்வதாகவே 'சமகம்' அமைத்திருக்கின்றது. சமகத்தில் கூறப்படாத பயன் எதுவும் இல்லை என்று கூறும்படி எல்லாம் அதனுள் அடங்கியிருக்கின்றன. இத்தகைய மகாநியாசத்துடன் கூடிய ஸ்ரீ ருத்ராபிஷேகத்தை மண்டலாபிஷேக நாட்களில், ஸ்ரீ வைத்யநாதருக்கும். ஸ்ரீ தையல்நாயகிக்கும் செய்வதே மண்டலாபிஷேகத்தின் தன்னிகரற்ற மாண்பிற்குக் காரணம் ஆகும்.

இம் மண்டலாபிஷேகம் தொடங்கிய பின்னர் வரும் கிருத்திகை முதல் அடுத்த கிருத்திகை வரை (மண்டலாபிஷேக நிறைவு நாள் வரை) ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானை அம்பாள் சந்நிதியில் - சித்தாமிர்தத்திற்கு எதிரில் எழுந்தருளச் செய்வதும் சித்தாமிர்த தீர்த்தக்கரையில் பந்தல் அமைப்பதும் கோடை வெப்பம் தணிப்பதற்கே என்பது நன்கு தெளியலாம். மேலும் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானுக்கு உச்சிக்கால வழிபாட்டிற்குப் பின்னர் கவசம் சாத்தாமல் சந்தனம் சாத்துவதும் கோடைவெப்பம்தணிப்பதற்குத்தான் என்பதும் தெரியவருகிறது. கோடைக்காலத்தை வசந்தருது என்றும், மழைக்காலத்தை சரத்ருது என்றும் வழங்குகின்றோம். இவ்விரண்டு ருதுக்களையும் யமனுடைய இரு கோரைப்பற்களோடு ஒப்பிட்டுக் கூறுவர். கோடைக்காலத்தில் வெப்பம் மிகுதியால் அம்மை முதலிய நோய்களும் மழைக்காலத்தில் தட்பமிகுதியால் காலரா முதலிய நோய்களும் வருகின்றன. இந்நோய்கள் வராதிருக்க உலக நலங்கருதி வசந்தருதுவில் வசந்த நவராத்திரி விழாவும், சரத்ருதுவில் சாரதா நவராத்திரி விழாவும் கொண்டாடி அம்மையை வழிபடுகின்றோம். அதைப்போல சித்திரை மாதத்தில் தொடங்கி தொன்று தொட்டு நிகழ்த்தப்பெறும் இவ் விழாவும் கோடைக் காலத்தில் வெப்பமிகுதியால் வரும் நோய்களினின்றும் நீங்கி நாடும் மக்களும் நலம்பெறவே செய்யப்பெறுகிறது என்பதை நன்கு தெளியலாம்.

மண்டலாபிஷேக நிறைவுநாள் கிருத்திகை நாளாக அமைகிறது அன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானுக்கு நிகழ்த்துவதுபோல பஞ்சமூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெறும். மேலும் மாதக் கிருத்திகையில் பிராகாரத்தில் வலம் வரும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமான் அன்று பஞ்ச மூர்த்திகளோடு வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறு அபிஷேக ஆராதனைகளும் திருவீதி யுலாவும் நிகழ்த்தப் பெறுவதால் மண்டலாபிஷேக நாட்கள் மகோத்சவ நாட்களாகக் கருதப்பெறுகின்றன. இம்மண்டலாபி

ஷேகம் சித்திரை அஸ்த நட்சத்திர நாளைத் தொடக்க நாளாகக் கொண்டிருப்பதால் வைகாசி அல்லது ஆனி மாதத்தில் வரும் கிருத்திகையில் நிறைவு பெறுகிறது. இவ்வாண்டு வைகாசித் திங்களில் நடைபெறுகிறது.

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானையும், ஸ்ரீவைத்யநாதப் பெருமானையும், ஸ்ரீ தையல்நாயகியையும் பன்னூறு ஆண்டுகளாக இவ்வாறு ஆகம அடிப்படையில், மந்திர பூர்வமாக அர்ச்சித்து அபிஷேகம் செய்து ஆராதனை செய்து வருவதனாலேயே நாடு நலம்பெறுகிறது; நல்லோர் வாழ்கின்றனர்; நன்மை நிலைபெற்றுள்ளது; என்று கூறுவது மிகையாகாது.

திருவருள்பெற வாய்ப்பு :

இன்பத்தைப் பெறவேண்டும் என்றும், துன்பத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்றும் வேண்டாதார் யாரும் இல்லை. இவர்கள் தூய பக்தியோடு வழிபாடுசெய்து இருமைப் பயன்களையும் பெறுகின்றனர். இவ்வழிபாட்டிற்குத் துணை நிற்பனவே தாம் இயற்றிவரும் பூஜாகிரியைகள். புள்ளிருக்கு வேளூர் மண்டலாபிஷேகக் கிருத்திகை இத்தகைய நுட்பமான பொருள் பொதிந்த திருவிழாவாக உள்ளது. திரள்திரளாக வருகின்ற பக்தர் கூட்டம் இந்தக் கிருத்திகையின் சிறப்பினை நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு உணர்ந்துகொண்டால் மேலும் பக்தி சிரத்தையோடு இதிற் கலந்துகொள்ளவும், திருவருளைப் பெறவும் வாய்ப்பாகும்.

குருமணியின் திருவுள்ளம் :

சமய விழாக்கள் முதலியவற்றின் நுட்பமான பொருளை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று பெருங்கருணை பாலிக்கும் திருவுள்ளம் உடைய தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவ்வாண்டும் 14—6—77 செவ்வாய்க்கிழமையன்று மண்டலாபிஷேகக் கிருத்திகையில் வேளூர்க்கு எழுந்தருளிப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், பெருமானின் திருவருள், அபிஷேகம், தரிசனம் பெறும் வாய்ப்பை வழங்குகிறார்கள். "மண்டலாபிஷேகக் கிருத்திகை" என்பதன் உண்மையான மாண்பு என்ன என்று சமுதாயம் விளங்கிக்கொண்டு மிக்க ஆர்வத்துடன் தரிசித்து இருமைப்பயன்களையும் பெற்று உய்வதாக.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன முதற்குரவர்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவில்

சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

ஆசியுரை

29—5—1977

" வழுவிலா துன்னை வாழ்த்தி வழிபடும் தொண்டனேன் உன்
செழுமலர்ப் பாதம் காணத் தெண்டிரை நஞ்ச முண்ட
குழகனே கோலவில்லி கூத்தனே மாத்தா யுள்ள
அழகனே ஆலவாயில் அப்பனே அருள்செயாயே "

சமயப் பயிற்சி வகுப்பு :

நம் தருமை ஆதீனக் குருமுதல்வரின் குருபூஜை விழாவை முன்னிட்டு 10 நாட்களும் சமயப்பயிற்சி வகுப்பு ஆண்டுதோறும் திருவருளால் நடைபெற்று வருகின்றது. இவ்வகுப்பில் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறை, சாத்திரம் முதலியன எளிய முறையில் கற்பிக்கப் பெறுகின்றன. உலகில் உள்ள பலரும் பல்வேறு தொழில்களில் பங்கு கொண்டுள்ளனர். அவர்கள் தமது சமயம் பற்றியும், அதன் உண்மைகள் பற்றியும், கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகள் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றனர். எல்லோரும் ஒரே இடத்தில் எப்பொழுதும் கூடுவது இயலாது. எனவே அவர்கள் இதுபோன்ற விழா நாட்களை சமயத்திற்காக ஒதுக்கிவைத்துப் பயன்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும். இந்நாட்களில் போதிக்கப்படுகின்ற சமய தத்துவக் கருத்துக்களைக்கருத்தூன்றி, கற்றுப் பயனடைதல் மக்களின் தலையாயகடமையாகும். இவ்வாறு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஆண்டவன் அருளும் ஆசாரியன் ஆசியும் இன்றியமையாததாகும். இங்கு ஆசி வழங்

குதல் என்பது, நம் ஆதீனக் குருமுதல்வர் குருஞானசம்பந்தரின் அருள் அனுபவங்களையும் அவர் அருளிச் செய்த பாடல்களையும் நினைவு கூர்தலேயாகும்.

சக்தியும் சிவமும் ;

நமது சாத்திரங்கள் இறைவனை வணங்கும் நெறிமுறைகளை முக்கியமாக இரண்டாகப் பிரிக்கின்றன். அவை கிரியை என்றும் ஞானம் என்றும் கூறப்படுகின்றன. இவையே வேதத்தில் கர்மகாண்டம், ஞானகாண்டம் என்று பேசப்படுகின்றன. முதலில் கர்மத்தைச் செய்தால் பிறகு ஞானம் கைவரப்பெறும். கிரியை இல்லாது ஞானம் என்றும் பெற இயலாது. ஆதலின் முதலில் செயல்; பிறகே ஞானம்.

நம் இறைவன் திருவடிகளிலும் இவை இரண்டும் பொருந்தி இருப்பதைக் காணலாம். சக்தி (செயல்) என்றும் சிவம் (ஞானம்) என்றும் இரண்டு திருவடிகளும் கூறப்பெறுவதால் செயலும் ஞானமும் இரண்டு திருவடிகளிலும் பொருந்தி இருப்பதனை உணரலாம். வலது திருவடி சிவம் - ஞானமென்றும், இடது திருவடி சத்தி - செயல் என்றும் கொள்ள வேண்டும். இந்த நிலையினைத்தான் வேதம் ஆகமம் அனைத்தும் எடுத்தியம்பு கின்றன.

நாம் ஒருவருக்கொருவர் உரையாடுகின்ற பொழுதும்கூட, பயன்படுத்துகின்ற தொடர் இவ்வுண்மையை நமக்குத் தெளிய வைக்கிறது. "சக்தி இருந்தால் செய்! இல்லையேல் சிவனே என்றிரு" என்று கூறுவதைக் கேட்கிறோம். அவ்வார்த்தைகளில் செயல்படுவது (கர்மாவைச் செய்வது) சக்தி என்றும் அதற்கு அடிப்படையாக இருப்பது அறிவு என்றும் தெளிந்து கொள் கிறோம். இதுபற்றித்தான் ஆசாரியன் பக்குவமுள்ள சிஷ்யனுக்கு அறிவும் செயலும் விளக்கமுறுதற் பொருட்டு சிவசக்தியாக (ஞானமும் செயலுமாக) இருக்கின்ற தம்முடைய இருதிருவடி களையும் முடிமேல் சூட்டி அறிவு விளக்கம் செய்கின்ற முறை, சைவத்தில் போற்றிப் பாதுகாத்துவரப்படுகின்றது. நமது சாத்திரங்களில் சரியை கிரியை என்ற இரண்டும் கர்மகாண்டப் பகுதியாகவும் யோகம் ஞானம் என்ற இரண்டும் ஞானகாண்டப் பகுதியாகவும் கொள்ளப்படுகின்றன.

பூஜா - சொல் விளக்கம் :

"பூர்யதே ஜாயதே இதி பூஜா" என்று வட மொழியில் கூறுகின்றனர். பூர்யதே என்பதால் கர்ம (செயல்) பூர்த்தியும்

ஜாயதே என்பதால் ஞானத்தோற்றமும் சொல்லப்பெறுகின்றன. பூஜா என்ற சொல்லிலேயே கிரியை ஞானம் எனும் இரண்டும் உள்ளன. எவன் ஒருவன் கர்மாவைச் சரியாகச் செய்கின்றானோ அவன் நாளுக்கு நாள் ஞானியாகின்றான். எவன் ஒருவன் கர்மா (செயல்) செய்வதில் சோம்பல் கொள்கின்றானோ அவன் நாளுக்கு நாள் அஞ்ஞானியாகின்றான். கர்மாவின் பூர்த்தியிலேதான் ஒருவனுக்கு ஞானம் தோன்றுகிறது.

அம்புஜம் என்றால் தாமரை என்று பொருள். அம்பு – நீர் ஜம் – தோன்றுவது என்னும் பொருள்பட்டு அம்புஜம் என்பது நீரில் தோன்றுகின்ற தாமரையைக் குறிக்கிறது. இதே போன்று பங்கஜம் என்றால் தாமரை என்று பொருள். பங்கம் – சேறு. ஜம் – தோன்றுவது என்னும் பொருள்பட்டுப் பங்கஜம் என்பது சேற்றின்கண் தோன்றுகின்ற தாமரையைக் குறிக்கின்றது.

இங்ஙனமே கர்ம பூர்த்தியில் இருந்து ஞானம் தோன்றும் என்பதைப் பூஜா என்றசொல் உணர்த்துகின்றது. இதுபற்றியே அருணந்திசிவமும் சிவஞானசித்தியாரில் 'கிரியை என மருவும் யாவும் ஞானம் கிடைத்தற்கு ஏது' என்று அருளியுள்ளார்.

கடமையைச் செய் :

பூஜை புரிவோரும் பூஜைக்கு அடி நிலையில் உள்ள சரியைத் தொண்டு செய்வோரும் மேலும் யோகியர் ஞானியரும் அவரவர்க்குள்ள கடமைகளைத் தவறாது செய்தல் வேண்டும். ஒரு பலனை எதிர்பார்த்துப் பணியாற்றுதல் சாதாரண மனிதன் செயல். பலனில் பற்றுவையாது பணிபுரிதல் உயர்ந்தோர் செயல். பயனை எதிர்பார்த்தாலும் எதிர்பாராவிட்டாலும் அவரவர் செய்த கடமைக்கும் – பணிக்கும் ஏற்ற பலனை ஒரு சிறிதும் தவறாது வழங்குபவன் இறைவன். இதுபற்றியேதான் கீதையில் கண்ணனும் "கடமையைச் செய்; பலனில் பற்றுவையாதே" என்று கூறியுள்ளார். நமது சமயாசாரியருள் ஒருவரான அப்பர் பெருமானும் கூட, "தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று அருளினார்.

குரு முதல்வரின் அருளாசி :

இந்த ஆதீனத்தை நிறுவிய நம் ஆசாரியர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் எட்டு நூல்கள் அருளிச்செய்துள்ளார்கள். அவற்றுள் இரண்டு நூல்கள் மிக எளிமையும் வளமையும் உடையவை. அவை, சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா என்பன.

ஆசாரியனின் அருமை பெருமைகளை அறிவிக்கும் அனுபவங்களைச் சொல்லும் நூல் சிவபோகசாரம். தமது ஆன்மார்த்த மூர்த்தி சொக்கநாதப் பெருமானின் அருமை பெருமைகளைத் தெரிவிக்கும் அனுபூதி நூல் சொக்கநாத வெண்பா. ஆசாரியனைப்பற்றியும் ஆன்மார்த்த மூர்த்தி சொக்கநாதப் பெருமானைப் பற்றியும் அகங்குழைந்து அருளியுள்ள குரு முதல்வரின் அருட் பாடல்களைச் சிந்திப்பதே இவ்வகுப்பிற்கு ஆசீர்வாதம் ஆகும்.

“ ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே ” என்ற திருத் தாண்டகத்தில் “ கண்ணுதலாய்க் காட்டாக்கால் காண்பார் யார் ” என்று வினவுகிறார் அப்பர் பெருமான். அடுத்து “அவன் அருளாலே அவன்தாள் வணங்கி ” என்று அறிவிக்கின்றார் மணிவாசகர். இக்கருத்தை நம் குருமுதல்வர்,

“ உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் - உணர்த்தி என்னுள்
பூண்ட மல மாயை கன்மம் போக்கிச் சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநா தா.”

என்ற வெண்பாவால் தெளிவுபடுத்துகின்றார். காட்டும் ஒளியாகிய சூரியன் உணர்த்தக் காணும் ஒளியாகிய கண் காண்பது போல், காட்டும் உணர்வுள்ள இறைவன் உணர்த்தக் காணும் உணர்வாக இருக்கின்ற உயிர் உணர்கிறது என்பதை எளிமையாக உணர்த்தும் திறன் போற்றும் பான்மையதாய் உள்ளது.

எல்லோரும் இன்பத்தை விழைகின்றனர். துன்பத்தை வெறுக்கின்றனர். துன்பந்தான் மனிதனை உயர்த்துவது.

“ சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.” — குறள்.

சுடச் சுடத்தான் பொன்னுக்கு ஒளியேற்படுகிறது. அதுபோல துன்பம் சுடச் சுடத்தான் உயிரும் உய்திபெறுகின்றது. துன்பம் என்பது நெருப்புப்போன்றது. இன்பம் என்பது நிழல் போன்றது. நம்முடைய அறியாமையைப் போக்குவதற்குத் துன்பம் என்னும் கனலால்தான் இயலும். நாம் கட்டினின்றும் விடுபட்டுச் சுதந்திரமாக இயங்க வேண்டுமானால் துன்பம் நமக்கு வேண்டுவதே. எல்லாமும் வல்ல சித்தராக இருக்கும் பெருமானிடம் துன்பம் இல்லாமல் கட்டறுக்க இயலாதோ என்று கேட்கிறார்! ஆனால் அதற்கு இயலாது என்பதே விடை என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அப்பாடலைச் சிந்திப்போம்.

" அனைத்துயிர்க்கும் பாசம் அறுத்தி முத்திகூட்ட
மனத்துயரம் செய்தல் மருந்தோ – மனத்துயரம்
செய்யாமல் தீர் மருந்து சித்தா அறிந்திலையோ
ஐயாஎன் சொக்கநா தா."

நம்முடைய உடலை ஊன்றி நோக்கினால் அருவருப்பே மிகுதியாகத் தோன்றும். அப்படிப்பட்ட உடலில் அருவருப்பே தோன்றாமல் ஆர்வத்தை உண்டாக்கியிருக்கின்றான் இறைவன். வினைகளைச்செய்து அவ்வினைகளால்விளையக்கூடிய இன்பத்துன்பங்களை அனுபவித்து அவ்வினைகளை அறுப்பதற்குத்தான் அருவருப்பாக உள்ள உடலை அருவருப்புத் தோன்றாமல் செய்திருக்கிறான் என்கிறார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இதை,

" அருவருப்பே மெத்தியிடும் ஆகத்தைச் சற்றும்
அருவருக்கத் தோற்றுதில்லை ஐயோ – அருவருக்கத்
தோற்றிடா தென்னவினை துய்ப்பித் தறுப்பதற்கோ
சாற்றியிடாய் சொக்கநா தா."

என்ற பாடல் மூலம் விளக்கியிருக்கின்றார்.

ஆசாரியனைக் கண்ட மாத்திரத்தில் ஊழ்வினைகள் எல்லாம் தீரும் என்றுகூறும் சாத்திரம். அதேபோன்று குருஞானசம்பந்தர் தேன்பிலிற்றும் சோலைசூழும் திருவாரூரில் வாழும் கமலை ஞானப்பிரகாசராகிய ஆசாரியனைக் கண்ட மாத்திரத்திலேயே பாசம் அகன்றார். அமுதை முகந்து உண்டார். சுகானந்தத்துள் இருந்தார். இதை ஒரு சிவபோகசாரப் பாடல் மூலம் விளக்கியருளுகின்றார்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

" கண்டேன் இப்பாசங்கழிந்தேன் அமுதைமுகந்
துண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன் – வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்ர காசனையே நான்."

அவர் மேலும் சைவ சித்தாந்தத்தில் கூறப்பெறும் முப்பொருள் உண்மையை ஆசாரியன் தமக்கு அறிவித்ததாக ஒரு வெண்பாவில் அருளியுள்ளார்கள்.

" என்னை அறிவென்றான்; என் அறிவில் ஆனந்தம்
தன்னை சிவம் என்றான் சந்ததமும் – என்னை உன்னிப்
பாரா மறைத்ததுவே பாசம் என்றான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர் முத்த ராம்."

இத்தகு அருளுபதேசங்களை நாட்டு மக்கட்கு வழங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயம். அவ்வாலயத்தில்தான் பத்து நாள் மகோற்சவம் சிறப்பாக நடைபெறவுள்ளது. அக் குருஞான சம்பந்தர்தான் நமது ஆதீனத்தின் ஆதிபரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்களது ஆசியுடன் வகுப்புத் தொடங்குகிறது; மகோற்சவமும் தொடங்குகிறது.

கோயில்கள் ஏன்?

நாட்டில் இத்துணைக் கோயில்களும் மடாலயங்களும் இருக்கின்றனவே ஏன்? இவையெல்லாம் தேவைதானா என்று சிலர் கேட்கின்றனர்.

திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மருத்துவத்துறை அமைச்சராய் இருந்தபோது ஆதீன உயர்நிலைப்பள்ளியில் அடிக்கல் நாட்டிப் பேசினர். பேசுகையில் 'மருத்துவத்துறைக்கு 25 கோடி ரூபாய் செலவிடுகிறோம். ஆனால் அதில் ஒருகோடி ரூபாய்தான் மருந்துக்குப் போகிறது' என்றார். இவ்வளவு செலவு செய்தும் நாட்டிலே மக்கள் அனைவரும் நோய் இல்லாமல் இருக்கிறார்களா? நோய் வாய்ப்பட்டவர்கள் எல்லோரும் குணமாகி விடுகிறார்களா? நோயினால் மக்கள் இறப்பதே இல்லையா? அப்போதே 25 கோடி ரூபாய் என்றால் இப்போது இன்னும் அதிகமாகச் செலவாகுமே! அதேபோல கல்வித்துறைக்குப் பல கோடி ரூபாய் செலவிடப் படுகிறது. இதனால் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெறுகிறார்களா? படிப்பவர்கள் அனைவருமே தேறிவிடுகிறார்களா? இல்லையே!

பண்பை வளர்க்கும் பண்ணை:

கோயில்கள் மடாலயங்கள் பக்தியை வளர்க்கின்றன. பக்தி வளர வளரப் பண்பாடு வளர்கிறது. மக்களுக்கு அறிவு வளரும்போதே பண்பாடும் வளரவேண்டும். கல்வி நிலையங்கள் அறிவை வளர்க்கின்றன. கோயில்கள் மடாலயங்கள் பண்பாட்டை வளர்க்கின்றன. உலக்கைக்குப் பிடித்தால் உளிப் பிடிக்குத்தேறும் என்பார்கள். அதாவது உலக்கை செய்ய மரத்தைத் தேர்ந்து எடுத்தால் கடைசியாக அது உளிப்பிடி செய்வதற்காவது தேறும். மருத்துவத்துறைக்குப் பலகோடி செலவு செய்கிறார்களே அதற்கு முழுப்பலன் கிடைக்கிறதா? கல்விக்குப் பலகோடி செலவாகிறதே அதற்கு முழுப்பலன்

கிடைக்கிறதா என்றால் இல்லையே! மருத்துவத்திற்கும் கல்விக்கும் கோடிக்கணக்கில் செலவு செய்தும் ஓரளவுக்குத்தான் பலன் கிடைக்கிறது. அதுபோல் இத்துணைக் கோயில்களும் மடாலயங்களும் இருப்பதனால்தான் இந்த அளவுக்காவது பண்பாடு வளர்ந்துள்ளது.

பண்பாடு வளர :

இப்பண்பாட்டு நெறி முறைகள் எல்லாம் சாத்தியம் ஆக வேண்டுமானால் சம்பந்த சரணாலயர் வரலாறு நமக்குச் சான்றாக விளங்கும் சரியை கிரியை யோகம் ஞானம் கைகூடவும் சிவபூஜையால் சிறப்புஎய்தவும் குரு லிங்க சங்கமபத்தி இன்றியமையாதது. இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார் நமது ஆதீனத் திருக்கூட்டத்தில் அடியவராக விளங்கிய சம்பந்த சரணாலயர்.

குருலிங்க சங்கம வழிபாடு :

'கந்தபுராணச்சுருக்கம்' எனும் நூலை எழுதியருளிய சம்பந்த சரணாலயர் என்னும் அடியவரிடம் அவருக்கு மைசூர் மகாராஜா "பட்டணப் பிரவேசம்" செய்ய வேண்டும் என்று கேட்டார். ஆனால்சம்பந்தசரணாலயர் 'குருவின் அனுமதியின்றி அதுகூடாது' என்று பதில் கூறிவிட்டார். பின்னர் குருவிடம் உத்தரவு பெற்றுப் பட்டணப்பிரவேசம் நிகழ்த்தினார் மைசூர் மகாராஜா; இதில் சம்பந்த சரணாலயரின் குருபக்தியைக் காண்கின்றோம். அதுமட்டுமல்ல; மைசூர் மகாராஜா சம்பந்த சரணாலயருக்குப் பொருள் கொடுத்தபொழுது, அவர் 'இதை எங்கள் குருநாதருக்குக் காணிக்கை ஆக்குகின்றேன்' என்றார். மகாராஜா மேலும் பொருள் கொடுத்தபொழுது 'இது எங்கள் சொக்கநாதப் பெருமானுக்குக் காணிக்கை' என்றார். மகாராஜா மேலும் பொருள் கொடுத்தபொழுது 'இது எங்கள் தருமை ஆதீனத் திருக்கூட்டத்தடியவர்களுக்கு ஆருக' என்றார்.

இவையனைத்தையும் கேட்ட மன்னன், இங்ஙனம் தாங்கள் கூறும் தருமை ஆதீனத்தில் உள்ள ஸ்ரீ சொக்கநாதர் பற்றியும், குருவைப் பற்றியும், திருக்கூட்டத்து அடியவர்கள் பற்றியும் விளக்கியருளுங்கள் என்று கேட்க, அதற்குச் சம்பந்தசரணாலயர்,

"ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை, ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கை எல்லாம், கல்வி கேள்வி அல்லல்
ஓய்வார், சிவானந்த வாரியுள்ளே ஒன்றிரண்டு மறத்
தோய்வார், கமலையுள் ஞானப்பிரகாசன் மெய்த்
[தொண்டர்களே "

என்று தருமை ஆதீனத்தின் சொக்கநாதர் அருளையும் குருவின் சிறப்பையும் அடியவர் பெருமையையும் விளக்கினர்கள்.

இங்ஙனம் அவர் கொண்டிருந்த குருபக்தி சிவபக்தி அடியார் பக்தியையே குருலிங்கசங்கமவழிபாடுகளுக்குஎடுத்துக்காட்டாகக் கூறலாம். அடியார்களிடம் முறையான பக்திகொண்டு அவர்களை வழிபட்டு வந்தால் குருவிடம் கொண்டு சேர்ப்பர். அவர் ஆண்டவனிடம் நம்மை ஈடுபடுத்துவார். ஆதலால் குருலிங்க சங்கம வழிபாடு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது.

இங்கு நிகழும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் மகோற்சவம், குருபூஜை விழா, மாகேஸ்வர பூஜை முதலியன குருலிங்க சங்கம வழிபாடுகளை விளக்கும் முறையில் நிகழ்கின்றன. இவ் விழாவையொட்டி இங்கு நடைபெறும் சமயப்பயிற்சிவகுப்பில் பலரும் கலந்துகொண்டு பயிற்சி பெறுகின்றவர்களுக்கும் பயிற்று விப்பவர்களுக்கும், நலமெலாம் பெருக செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க உலகெலாம்.

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தி லிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	ரூ.	6—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	ரூ.	7—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	ரூ.	10—00
ஆயுள் சந்தா	ரூ.	100—00

செயலாளர் :— ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609001.
தஞ்சை மாவட்டம்.

சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழாவில்

" ஆலயத் திருப்பணி மணி "

திரு. V. K. இராமசாமி முதலியார் அவர்கள்

ஆற்றிய உரை

இன்று நிகழும் இப்புனித விழாவில் கலந்துகொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆண்டுதோறும் நடைபெறும் குருபூசை விழாக்களில் இதற்குமுன் பல பெரியார்கள் கலந்துகொண்டு அவற்றைச் சிறப்பித்திருக்கிறார்கள். இவ்வாண்டு அத்தகைய வாய்ப்பினை எனக்களித்து என்னைக் கௌரவித்த மகாசந்நிதானம் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சமயப்பற்று மிக்க ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன். அரசியலில் ஓரளவு பங்கு கொண்டவன் என்றாலும் எனக்கு இளமைப் பருவத்திலிருந்தே சமயப்பற்றும் ஆலய வழிபாடும். சமயச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும் உண்டு. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜகத்குரு அவர்களிடம் நெடுங்காலமாக எனக்கு இருந்து வந்த தொடர்பின் காரணமாக ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயத் திருப்பணி செய்யவும், அருள் பொங்கும் அந்த அம்பாளை அடிக்கடி தரிசனம் செய்யவும் காஞ்சிப் பெரியவரின் அருள் மொழிகளைக் கேட்டு மகிழவும் எனக்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என்பதை எண்ணும்போது உண்மையிலேயே நான் பூரிப்படைகின்றேன்.

தருமை ஆதீனம் மகாசந்நிதானங்கள் சென்ற பல ஆண்டுகளாக மிகப் பெரும் சேவைகள் செய்து வந்துள்ளனர். சமய சம்பந்தமான இலக்கியங்களைப் பெருமளவில் வெளியிட்டும், சமயப் பிரசாரங்களை ஏற்படுத்தியும், அதற்காகச் சென்னையில் நிரந்தரமான ஒரு பிரச்சார நிலையத்தை நிறுவி நன்கு பராமரித்து வந்தும், தமிழ்க் கல்லூரி, வேதாகம பாடசாலை, தேவார பாடசாலை போன்ற நிறுவனங்களை நல்ல முறையில் நடத்தியும் சமயத்துறையில் அரிய பணிகளைச் செய்து வந்துள்ளார்கள். இச்சீரிய பணிகளை இப்பொழுது அருளாட்சி செய்துவரும் மகாசந்நிதானம் அவர்களும் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். அவர்களுக்குச் சைவ நன்மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

சமயத்தை மேற் சொன்ன முறைகளில் பேணி வளர்த்து வருவதோடு இந்த ஆதீனம் தமிழையும் போற்றி வளர்த்து வருவது மிகவும் பாராட்டுதற்குரியது. தமிழ்ப் புலவர்களில் சிறந்தவர்களை ஆதரித்து அவர்களுக்கு ஆண்டுதோறும் தகுந்த பட்டங்கள் அளித்துக் கௌரவித்து வருகிறார்கள். அங்ஙனம் செய்து வருவது தமிழ் மொழியின் பால் அவர்களுக்குள்ள ஆழ்ந்த பற்றின் காரணமாகவே நிகழ்வதாகும்: தமிழும் சமயமும் உண்மையில் வேறுபடுத்திப் பிரிக்க முடியாத அளவுக்கு இணைந்துள்ளன என்பதை நாம் என்றும் மறக்கவோ மறுக்கவோ முடியாத தொன்று.

இப்பொழுது எழுந்தருளியிருக்கும் குருமகா சந்நிதானம் அவர்கள் சென்னையில் சமயப்பிரசார நிலையத்தில் போற்றத்தக்க பல சாதனைகள் செய்துள்ளார்கள். இவர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் பால் அளவற்ற பக்தி கொண்டவர்களாகையால் அவர்கள் அவதரித்த திருவாமூர் என்னும் தலத்தில் சிறந்ததோர் ஆலயம் எழுப்பி பூசைகள் முட்டின்றி நடக்கும் பொருட்டு தக்க ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்கள். இது தவிர சமயப் பிரச்சாரத் துறையில் ஆர்வத்தோடும், ஆற்றலோடும் மிகப்பல நல்லகாரியங்களைச் செய்து பக்தர் குழாம் ஒன்றையும் உருவாக்கியுள்ளார்கள். எனவே சென்னை மக்களுக்கு இவர்கள் நன்கு பழக்கமானவர்கள்.

ஆனால் இன்று மேற்சொன்ன நல்ல காரியங்களைச் செம்மையான முறையில் நடத்துவதற்குப் பொருளாதார நிலை பெருந்தடையாகவே இருக்கிறது என்பதை நாம் நன்கு காணமுடிகின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடியால் அவர்கள் ஆதிக்கத்திலுள்ள ஆலயங்களைச் சரிவர நிர்வாகம் செய்யவும் இயலாமல் போய்விடுகிறது. தருமையாதீனக் கோயில்கள் துப்புரவுடன் செம்மையாக நிர்வகிக்கப்பட்டு வருவது நாம னைவரும் நன்கு அறிந்ததே. நிலச் சீர்திருத்தம் என்ற பேரால் ஆலயங்களின் வருவாய்க்குப் பெரும் குந்தகம் ஏற்படுத்தப்பட்டு விட்டது. ஆலய வழிபாட்டில் குறைகள் ஏற்படுமானல் அவை அரசின் ஆட்சியையும் மக்கள் நலத்தையும் பெரிதும் பாதிக்கும் என்ற திருமூலரின் திருமந்திர உபதேசத்தை யாரே புறக்கணிக்க வல்லார்? பாடல் நாம் நன்கு அறிந்ததே.

“முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் தீங்குள; வாரி வளம் குன்றும்,
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே.”

ஆகையால் ஆலயங்களின் வருவாயைக் குறைக்கும் சட்டங்களி லிருந்து அவற்றிற்கு விதிவிலக்கு அளித்தாலொழிய இப்பொழு துள்ள நிலைமையில் மாறுதல் ஏற்பட இயலாது. ஆகையால் எல்லா மடங்களும் ஒன்று சேர்ந்து இதற்கான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதற்காக ஆஸ்திக மக்கள் எல்லோரும் ஒன்று சேர வேண்டும்.

கிறிஸ்துவ மதத்தைத் தழுவியிருந்த அந்நியர் ஆட்சியில் கூட நமது ஆலயங்களின் நிர்வாகத்தில் இத்தகைய குறுக்கீடுகள் இல்லாமலிருக்க, சுதந்திர இந்தியாவில் மதங்களின் வளர்ச் சிக்குத் தக்க சூழ்நிலை அமையாமல் இருப்பது முற்றிலும் வருந்தத் தக்கதே. இந்த நாட்டில் உண்மையான சமய வளர்ச்சிக்கு ஆலயங்கள்தாம் இன்றியமையாதவை. ஆழ்வாராதிகள் நாயன் மார்கள் என்ற எத்தனையோ மகான்களைத் தோற்றுவித்த ஆலய வழிபாடு சிறக்க வேண்டும். இதை மக்களின் பிரதி நிதிகள் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆலயவழிபாடு, சமயப் பிரச்சாரம் இவை மேலோங்கி நிற்ப தோடு கூட நமது சமயங்களுக்குள் பொது அம்சங்களில் அடிப் படை ஒற்றுமை இருப்பதை நாமனைவரும் உணரவேண்டியது மிகமிக அவசியம். இந்நாட்டில் உள்ள மதங்களிற் சிறப்பாக இந்து மதங்கள் என்று சொல்லப்படுவனவற்றுள் காழ்ப்புணர்ச்சி, பேத உணர்ச்சி இவை அறவே நீங்குதல் வேண்டும். இவை யனைத்திற்கும் பொது அம்சம் இறையுணர்ச்சி. இதைத்தான் முக்கியமானதாகக் கொள்ளவேண்டும். பிற அம்சங்கள் ஒற் றுமைக்கு இடைஞ்சலாக அமையக்கூடாது. எல்லா மதங்களும் ஒரே குறிக்கோளை அடைய பல்வேறு பாதைகளே.

சைவ மடங்களைப் பொறுத்த அளவில் இன்னும் ஒரு முக்கிய மான விஷயத்தைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். சைவ சித்தாந்தம் வேதாகமங்களின் சாரம் என்று கூறப்படுகிறது. வேதம் பசுவானால், அதன் பால் சைவ ஆகமம். நான்கு சமயாசாரியர்கள் (அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்) செய்தருளிய பாடல்கள் ஆகமமாகிய பாலிலிருந்து உண்டாகும் நெய்யாகும்; அந்த நெய்யின் சுவை சுவை மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் எனும் நூல். இத்தகையசிறப்புவாய்ந்த சைவசித்தாந்தத்தை உலகோபகாரம் கருதி நம் நாட்டிலும் இதர நாடுகளிலும் பரவச் செய்யவேண்டிய முயற்சிகள் சரிவர எடுக்கப்படவில்லை என்பது மிகவும் வருந்தத் தக்கதே. அமெரிக்கா போன்ற நாடுகளில் சைவ சித்தாந்தம்

முறையாக விளக்கப்படுமானால் அந்நாடுகளில் உள்ள அறிஞர்கள் உடனடியாக அதை ஏற்பார்கள் என்று காலஞ்சென்ற மேதை சர். சி பி இராமசாமி ஐயர் ஒரு சமயம் தெரிவித்தார்கள் என்பதைக் குறிப்பிட விழைகின்றேன். இதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். நமது சைவ மடங்கள் ஒன்று சேர்ந்து தமிழிலும், ஆங்கிலத்திலும் முக்கியமாக சைவ சித்தாந்தத்திலும் வல்லமைமிக்க தக்கார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி சைவ சித்தாந்தச் செந்நெறியினைப் பரவச் செய்ய வேண்டுவது அவசியம் எனக் கருதுகின்றேன். இந்த வேண்டுகோள் ஏற்கப்படும் என நம்புகின்றேன்.

இதுகாறும் பொறுமையுடன் இருந்து எனது சில கருத்துக்களைச் செவிமடுந்தமைக்காக உங்களனைவருக்கும் நன்றிகூறி, இந்தத் தருமையாதீனம் சைவத்தின் நிலைக்களனாய் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி விளங்க எல்லாம்வல்ல ஆலவாய் அண்ணல் அருள் புரியுமாறு இறைஞ்சி, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள்.

அருள்மிகு இளமுலைநாயகியை இடங்கொண்ட வேதபுரீஸ்வரர் ஆலய குடமுழுக்கு நன்கு பூர்த்தியாவான் வேண்டி மேற்கொள்ளப்பட்ட காவிரி வடகரை சிவதல யாத்திரையின் போது அடியார் குழாத்துடன் இவ்வாலயப்பெருமானை வழிபடும் பேறு பெற்றோம், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளின் அருளாசியும் கிடைக்கப்பெற்றோம். வழிபாடு புரிய திருக்கோயில் அலுவலர் யாவரும் அன்புடன் எங்கட்கு ஆவன புரிந்ததுடன் தங்கும் வசதி யாவும்செய்து கொடுத்தமையை என்றும் மறவோம். இவர்கள் தம்தொண்டு சிவ வழிபாட்டிற்குப் பெரிதும் உறுதுணையாய் நின்றமையைப் பாராட்டுகின்றோம். செஞ்சடையானைப் போற்றிப் பணிகின்றோம். திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனப் பெருங்குரவராம் குருமகாசந்நிதானம் பொன்னூர் திருவடிகட்கு மலரிட்டு வணங்குகின்றோம்.

(ஓ-ம்) தி. பூ பச்சையப்பன்,

குடமுழுக்குக் குழுவினர்,

தலைமையாசிரியர், அ. ஆ. உயர் நிலைப்பள்ளி,

25—2—77. பெருங்கட்டூர், செய்யாறு.

தருமையாதீன முதற்குரவர் குருபூஜை விழாவில் (7—6—77)



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்து
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளுக்குப்
பொன்னுடை போர்த்து ஆசிஅருளுதல்.

தருமையாதீன முதற்குரவர் குருபூஜை விழாவில் (8—6—77)



இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
பக்தர்கள் புடைசூழ சிவிகையில் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளல்

திருக்கொட்டையூர் – திருஇன்னம்பர்த் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,
திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

திருக்கொட்டையூர் :

சோழவள நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் வடகரையில் கும்பகோணத்திற்கு வடமேற்கே 2 கி. மீட்டர் தூரத்தில் சுவாமிமலைசெல்லும் பேருந்து வழியில் இத்தலம் உள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

வேறு பெயர்கள் :

இத்தலத்திற்கு வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்னும் வேறு பெயர்களும் உள்ளன. கொட்டையூர் என்ற பெயரே தேவாரத்திலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. சிவ தலங்கள் பலவும் ஊர்ப் பெயரும் கோயிற் பெயரும் வேறு வேறாகக் குறிக்கப்படுதல் போல இத்தலமும் ஊர்ப் பெயர் கொட்டையூர் எனவும் கோயிற்பெயர் கோடீச்சரம் எனவும் வழங்கப்படுகிறது.

கோடீச்சரம் :

பத்திரயோகி முனிவருக்கு இக்கொட்டையூர் இறைவன், கோடி விநாயகர், கோடி அம்மையார், கோடி முருகன், கோடிசண்டேசுவரர்களோடு தாமும் கோடித் திருவுருக் கொண்டு காட்சி வழங்கியருளினர். ஆதலின் இவ்வூர்க் கோயில் கோடீச்சரம் எனப் பெயர் பெற்றது. இன்றும் சிவலிங்கப் பெருமான் திருவுருவம் பலாப்பழம் போல முள் முள்ளாகப் பல்வேறு இலிங்கத்திருவுருவங்களோடு விளங்

குதல் காணத்தக்கது. கோடி விநாயகர் திருவுருவத்திலும் பல விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. இத்தலத்திலுள்ள இவ்வைந்து மூர்த்திகளையும் தரிசித்தார்க்குக் கோடிசிவாலய தரிசன பலன் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. இத்தலத் திற்செய்த தருமங்களும் அவ்வாறே கோடி மடங்காகிப் பயன் தரும் என்பர். இத்தலத்திற் பாவம் செய்தால் அதுவும் கோடி மடங்காகிக் கழுவாய் இன்றிமுடியும் எனக் கூறுவர். இதுபற்றி "கொட்டையூரிற் செய்த பாவம் கட்டையோடே" என்ற பழமொழியும் வழங்குகிறது.

கோயிலமைப்பு :

பேருந்து வழியின் தென்பால் கீழைக்கொட்டையூரின் நடுவே கிழக்குநோக்கி அமைந்துள்ளது திருக்கோயில். இரண்டு பிராகாரங்கள் உள்ளன. திருத்தோரணத் திருவாயிலாகிய இராஜகோபுரம் அறுபது அடி உயர முடையது; ஐந்து நிலைகளோடு கூடியது. இதைக்கடந்து உள்ளே சென்றதும் துவஜஸ்தம்பம் நந்தி பலிபீடங் களுடன் முன் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத் தின் வடபால் அம்பாள் கோயில் உள்ளது. வெளிப்பிரா காரத்தில் நந்தவனம் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் துர்க்கை கோயில் தெற்கு நோக்கி விளங்குகின்றது. திருமாளிகைத் திருவாயிலாகிய இரண்டாம் கோபுரம் நாற்பதடி உயரம் அமைந்துள்ளது; மூன்று நிலைகளுடன் கூடியது. இக்கோபுர வாயிலில் விநாயகர் முருகன் சந் நிதிகள் உள்ளன. மனுநீதிச்சோழன் மகனை முறைசெய்த வரலாற்றுச் சிற்பம் கோபுர நுழைவாயிலில் உள்ளது. இதைக்கடந்து உள்ளே சென்றதும் மகாமண்டபத்தை அடையலாம். இம்மண்டபத்தின் தென்பால் நால்வர் திரு வுருவங்களும், ஏரண்ட முனிவர் ஐயனார் திருவுருவங்களும் உள்ளன. வடபால் நடராஜர், நவக்கிரகங்கள், பைரவர், சூரியன் முதலிய திருவுருவங்கள் விளங்குகின்றன. சோமாஸ்கந்தருக்குத் தனி விமானமும் இங்குள்ளது. உட் பிராகாரத்தில் பஞ்சலிங்கக் கோயிலும் கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற் பவர் திருவுருவங்களும், எட்டுக்கைகளுடன் விளங்கும் துர்க்கைத் திருவுருவமும் உள்ளன. உட்பிராகாரச் சுவர் களில் அறுபத்துமூவர் பெயர்களுடன் வரலாற்றுச் சிறு குறிப்புக்கள் எழுதப்பெற்றுள்ளன. கோடி விநாயகர், கோடி முருகன், மகாலக்ஷ்மி கோயில்கள் உட்பிராகாரத்தின்

மேல்பால் திகழ்கின்றன. வடக்குப் பிராகாரத்தில் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள எட்டுக் கைகளுடன் கூடிய துர்க்கை திருவுருவம் மிக்க அழகுடையது. சண்டேசுவரர்கோயிலை அடுத்து இத்திருக்கோயிலுக்குரிய முக்கிய தீர்த்தமாகிய அமுதக்கிணறு இருக்கிறது. கோயிலை வலம்வந்து உள்ளே திருவணுக்கன் திருவாயிலை அடைகிறோம். இக்கோயிலுக்குரிய உற்சவமூர்த்திகள் இங்கு எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளனர். சுவாமி சந்நிதியை அடைந்தவுடன் நம் மனம் குவிவதை உணரலாம்.

"செந்தாமரைப் போது அணிந்தான் கண்டாய்
சிவன் கண்டாய் தேவர் பெருமான் கண்டாய்
பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்
பாலோடு நெய்தயிர்தேன் ஆடி கண்டாய்
மந்தாரம் உந்தி வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மன்னு மணாளன் கண்டாய்
கொந்தார் பொழில் புடைசூழ் கொட்டையூரில்
கோடீச்சுரத்துறையும் கோமான் தானே.

என்று திருவலஞ்சுழியையும் திருக்கொட்டையூரையும் இணைத்து அப்பரடிகள் கசிந்து பாடிப் போற்றிய திருப்பாடலை ஓதி வழிபட்டு கோடி சிவ தரிசன பலனைப் பெற்ற நிறைவுடன் வெளியே வருகின்றோம். அம்பாள் பந்தாடும் மெல்விரலாள் திருக்கோயிலை அடைந்து வழிபட்டு மன நிறைவு பெறுகிறோம்.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் ஸ்ரீ கோடீச்சுரர். இறைவி திருப்பெயர் ஸ்ரீ பந்தாடும்நாயகி. அம்மை திருப்பெயர் 'பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்' எனத் தேவாரத் திருப்பதிகத்திலும் குறிக்கப்பட்டுள்ளது.

தல மரம் :

கொட்டைச் செடி (ஆமணக்கு) பிராகாரத்திலுள்ளது.

தீர்த்தம் :

காவிரி, அமுதக்கிணறு (கோடி தீர்த்தம்)

தலபுராணக் குறிப்புக்கள் :

ஏரண்டமுனிவர் வழிபட்டது :- ஏரண்டம் - கொட்டைச் செடி. இச்செடியினடியிலிருந்து ஒரு முனிவர் தவம் செய்தார். சிவ பூசையும் செய்து அருள்பெற்ளுர். அவர் அத்திரி முனிவரின் மைந்தர். ஆத்திரேயர் என்னும் பெயர் உடையவர். கொட்டைச் செடியின் கீழிருந்து தவம் செய்தமையால் அவருக்கு ஏரண்ட முனிவர் என்னும் பெயர் உண்டாயிற்று.

அரித்துவசன் என்னும் அரசன் தவம் செய்து கொண்டிருக்கும் ஏரண்ட முனிவரை அடைந்தான். பன்முறை பணிந்து வணங்கிஞன். திருவலஞ்சுழியில் பிலத்திற் புகுந்து வெளிவராத காவிரியை வெளிப்படுத்த வேண்டிஞன். வேந்தன் வேண்டுகோளுக்கு இரங்கி பிலத்துட் சென்று காவிரியை வெளிக் கொணர்ந்தார். ஏரண்ட முனிவர் வாழ்ந்து தவம் பெருக்கிய இத்தலம் ஏரண்டபுரம் எனப்பெற்றது. இம்முனிவர் திருவுருவம் மகாமண்டபத்தில் சமயாசாரியர் அருகில் மிகப்பெரிதாகவும் அழகாகவும் அமைந்து திகழ்கிறது.

கோடீச்சுரம் எனப்பெற்றமை :

இமயச்சாரலில் பத்திரயோகி என்ற முனிவர் ஒருவர் தவம் செய்திருந்தார். திரிகர்த்த தேசத்து அரசன் மகன் சத்தியாதி என்பவன் வேட்டையாடிக்களைத்து முனிவர் இருக்குமிடத்திற்கு வந்தான். விழித்த கண்குருடாய் வீற்றிருந்து தவம் புரியும் முனிவர் அரசிளங்குமரனை அறியவில்லை. சிவயோகியார் தன்னை அவமதித்ததாக எண்ணி அவரை அவமதித்தான். இறந்து கிடந்த ஒருவன் உடம்பின் ஊனைச்சிதைத்து அச்சிதைவுகளை முனிவர்முன் குவித்து அகன்ருன். நிட்டை கலைந்த முனிவர் அரசனை வெகுண்டார். அரசிளங்குமரனைப் பிசாசம் ஆகுமாறு சபித்தார். இச்சாபத்தினுல் அரசிளங்குமாரனும் பிசாசம் ஆயினன். முனிவரும் தன் தவவலியை இழந்தார். கழுவாய் தேடினர்; கோடிதலம் சென்று தரிசித்து இழந்த வலியைப் பெறுவதென்று புறப்பட்டார். பல தலங்களுக்கும்சென்று தரிசித்துக் கொட்டையூரை அடைந்தார். இறைவன் அசரீரியாக பத்திரயோகியைவிளித்து, 'காலோய! கோடிதலம் நண்ணிக் கும்பிடவேண்டா. ' இத்தலத்தில் நாம் கோடி லிங்கமாக

உள்ளோம். வழிபட்டு நலம் பெறுக' என்று கூறிமுனிவருக்குக் கோடி விநாயகர், கோடி முருகன், கோடியம்மை இவர்களோடு தாமும் கோடிலிங்க வடிவுடன் காட்சி தந்தருளினர். பத்திரயோகியார் இத்தலத்தில் நாடோறும் வழிபாடாற்றிச் சிவஞானம் கைவரப்பெற்றார்.

சிவயோகியார் சாபத்தினால் பிசாசம் ஆன செய்தியை அறிந்த அரசன் தன் மகனைத் தீர்த்தயாத்திரைக்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டு இத்தலத்தை அடைந்தான். வியாச முனிவரின் வாய்மொழியால் இத்தலப் பெருமையை அறிந்தான். காவிரியிலும் கோடி தீர்த்தத்திலும் விதிப்படிப் படிவித்தான். கோடீச்சுரரையும் பந்தாடும் நாயகியையும் தரிசிக்கச் செய்தான். பலநாட்களாக உழன்ற பிசாச வடிவம் நீங்கப்பெற்றான். மைந்தனுடன் மன்னன் இத்தலத்தில் தங்கித் திருக்கோயில் திருப்பணிகளையும் புரிந்தான். நித்தியநைமித்திக வழிபாடுகள் செய்வித்தான். கோடி தீர்த்தம் வடக்குப் பிராகாரத்தில் அமுதக்கிணறு என்ற பெயருடன் உள்ளது.

தலத்தைப் பற்றிய நூல்கள் :

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவலஞ்சுழி கொட்டையூர் என்ற இரண்டு தலங்களையும் இணைத்துத்திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்று அருளிச் செய்துள்ளார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழும் உள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தலத்திற்றோன்றிச் சிறந்து விளங்கிய பெரும்புலவரான சிவக்கொழுந்து தேசிகர் இத்தலத்தைப்பற்றிக் கோடீச்சுரக் கோவை ஒன்று இயற்றியுள்ளார். இவர் பாடிய பிறிதொரு நூலாகிய கொட்டையூர் உலா கிடைக்கப்பெறவில்லை.

கல்வெட்டு வரலாறு :

திரு வை. சுந்தரேச வாண்டையார் அவர்களால் படியெடுக்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

இக்கோயிலில், இரண்டாம் இராசாதிராச சோழன் (கி. பி. 1163 - 1178) காலத்தது ஒன்றும், இவனுக்குப்பின் பட்டம் எய்திய மூன்றாங் குலோத்துங்கன் (கி. பி. 1178 - 1216) காலத்தவை மூன்றுமாக நான்கு கல்வெட்டுக்கள் *

* See the Annual report on South Indian Epigraphy for the year 1927. Nos 241 - 244.

இருக்கின்றன. இவைகளன்றி அம்மன் கோயிலில் ஒரு கல்வெட்டும் உண்டு.

இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டு :- இஃது அர்த்த மண்டபத்துத் தென்புறச் சுவரின் அடித்தளத்தில் இருக்கிறது. இது இம்மன்னன் அரியணை ஏறிய மூன்றும் ஆண்டு அதாவது கி. பி. 1166இல் பொறிக்கப்பெற்றது. இன்னம்பர் நாட்டு ஏர் என்னும் ஊரிலிருந்த அரையன் பொற்சோழன் மனைவியாகிய அருள்மொழி நங்கையார் இக்கொட்டையூர்க் கோடீச்சுரமுடையார் கோயிலில் புராண லிங்கதேவரை எழுந்தருளுவித்து அவர்க்கு அமுதுபடி உள்ளிட்டவைகளுக்கு நிபந்தம் அளித்துள்ள செய்தியை உணர்த்துகின்றது.

மூன்றாங் குலோத்துங்கன் கல்வெட்டு I :- இது மகா மண்டபத்தின் வடபுறச் சுவரில் இருக்கிறது. இஃது இம்மன்னன் அரியணை ஏறிய 32 ஆம் ஆண்டு அதாவது கி. பி. 1210இல் பொறிக்கப்பெற்றது. திருக்கோடீசுரமுடையார்க்கு மங்கலவன் பெரியதேவன், நச்சினார்க்கினியன் முதலான சிலர் ஒரு பித்தளை குத்துவிளக்குக் கொடுத்ததை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

மூன்றாங் குலோத்துங்கன் கல்வெட்டு II :- இதுவும் மகாமண்டபத்தின் வடபுறச் சுவரிலுள்ளது. இது இம் இம்மன்னன் அரியணை ஏறிய 27 ஆம் ஆண்டில் அதாவது கி. பி. 1205இல் செதுக்கப்பட்டது. இக்கோயில் திருமடைவிளாகத்து இருந்த பொன்னூரன்புடையான் அபயம்புக்கானின் மனைவியாகிய உதயஞ்செயல் என்னும் அம்மையார் திருக்கோடீச்சுரருக்குக் கோவை திருவிளைத்தட்டு, ஊது சங்கு, வட்டில், பஸ்மதளிகை இவைகளைக் கொடுத்துள்ளார் என்ற செய்தியைப் புலப்படுத்துகின்றது.

மூன்றாங் குலோத்துங்கன் கல்வெட்டு III:- இது முதற் கோபுரத்தின் தென்பால் கீழ்புறச் சுவரில் இரண்டு துண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இது இம்மன்னன் அரியணை ஏறிய 36 ஆம் ஆண்டு அதாவது கி. பி. 1214இல் தீட்டப்பட்டது. இது திருப்புகலூரில் இருந்த மும்மேனிரணதள நாயகன் திருநந்தவனத்திற்கு உடலாகப் பொருள் வைத்துள்ளான் என்று எண்ணக்கூடிய குறிப்புக்கள் அடங்கியதாய் உள்ளது.

அம்மன் கோயிற் கல்வெட்டு :- 'சுவஸ்திஸ்ரீ எழுபத்தொன்பது வளநாடும், நகரமும் பதினெண்ணே விஷயத்தாரும் தன்மம்' என்பதாகும். இதனால் பலரிடத்தும் பொருளீட்டி இத்திருக்காமக்கோட்டம் எடுப்பிக்கப்பெற்றது என்பதை அறியலாம்.

கொட்டையூர் வேங்கடாசலம் பிள்ளையின் கல்வெட்டு :- இது முதல் கோபுர வாசலடியில் இருக்கின்றது. கலியுகாதி 5014 தமிழ் பரிதாபி தை 4இல் இது செதுக்கப்பட்டது. கோடீச்சுரப் பெருமானுக்கு, காலசந்திக் கட்டளை, சோமவாரக் கட்டளை, சிவராத்திரிக்கட்டளை இவைகளுக்காக மேலைக்காவேரியில் 3 ஏக்கர் 85 செண்ட் நன்செய் நிலம் விட்டிருப்பதை அறிவிப்பதாகும்.

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்ட நாடு:- இன்னம்பர் நாட்டுப் பிரமதேயம் என்று கொட்டையூர் கூறப்படுகிறது. இவ்வின்னம்பர் நாட்டை உள்ளடக்கிய வளநாடு முதலாம் இராசராசன் காலத்தில் இராசேந்திரசிங்க வளநாடு என்றும், முதற்குலோத்துங்கன் காலத்தில் இதன் மேலைப் பகுதி உலகுய்ய வந்த சோழவள நாடு என்றும், விக்கிரம சோழன் காலத்தில் விக்கிரம சோழவள நாடு என்றும் வழங்கப்பெற்றிருந்தது. இவ்விக்கிரம சோழவள நாடு என்ற பெயரே இரண்டாம் இராசாதிராசன், மூன்றுங் குலோத்துங்கன் காலத்திலும் நின்று நிலவுவதாயிற்று. இக்கொட்டையூர்க்கு வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் ஏர் என்னும் வைப்புத்தலத்தின் பெயர் இக்கல்வெட்டில் காணப்படுகிறது. இந்த ஏர் என்னும் ஊருக்கு குலோத்துங்க சோழ வானவன் மங்கலம் என்ற வேறு பெயர் உண்மையையும் அறியலாம். இக்காலம் இவ்வூர் ஏரகரம் என்று வழங்கப்பெறுகின்றது.

2. திருஇன்னம்பர்

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து சுவாமி மலைக்குச் செல்லும் பேருந்துப் பெரும் வழியில், புளியஞ்சேரி என்னும் ஊருக்கு வடக்கே திருப்புறம்பயம் போகும் வழியில் 2 கி. மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரியின் வடகரைத் தலங்களில் 45வது தலமாகும். கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்து வண்டிகள் (டவுன்பஸ்) உள்ளன. அம்பர் என்பது ஊர்ப்பெயர், இதன் அடைமொழி.

கோயிலமைப்பு :

பேருந்துச் சாலையின் மேல்பால் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு எதிரே ஐராவத தீர்த்தம் உள்ளது. ஐந்து நிலைக் கோபுரம் கோயிலுக்கு அழகு தருகிறது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கொடி மர விநாயகர் நந்தி பலிபீடங்களுக்கு வடபால் தெற்கு நோக்கி அம்பாள் திருக்கோயில் அழகுறத் திகழ்கிறது. அம்பாள் சந்நிதிக்கு எதிரே சமயாசாரியர் நால்வர் கோயில் விளங்குகிறது. வெளிப்பிராகாரத்தில் நந்தவனம் உள்ளது. இரண்டாம் கட்டைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்ருல் சுவாமி கோயிலை அடையலாம். நாட்டுக் கோட்டை நகரத்தார் திருப்பணிசெய்யத்தொடங்கியுள்ளனர் கர்ப்பக் கிருகம் மற்றும் உட் பிராகாரத்தின் மேற் புறப் பகுதிகளின் திருப்பணி நிறைவேறியுள்ளது. தலவிநாயகர், முருகன், தக்ஷிணமூர்த்தி, சண்டிகேசுரர் முதலிய பரிவார மூர்த்திகள் பாலாலயம் செய்விக்கப்பெற்ற நிலையில் அம்பாள் கோயிலில் முப்பதாண்டுகளுக்கு மேலாக எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளனர். சுவாமி அம்பாளுக்கு அஷ்ட பந்தனம் மட்டும் சாத்தி கும்பாபிஷேகம் செய்துள்ளனர். உட்பிராகாரத்தில் கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தக்ஷிண மூர்த்தி இலிங்கோற்பவர் திருவுருவங்கள் மட்டும் உள்ளன. சுவாமி கருப்பக்கிருக விமானம் கஜப்பிருஷ்ட விமானம் என்று கூறப்படுகிறது; யானையின் உருவம் போலச் செய்யப் பெற்று ஐந்து வரிசையான கலசங்களோடு அழகுறத் திகழ்கிறது.

உட்பிராகாரத்தை வலம்வந்து உள்ளே மகாமண்டபம் அர்த்த மண்டபங்களைக் கடந்து சுவாமி சந்நிதியை அடைகிரேம்.

சுவாமி பெயர் எழுத்தறிநாதேசுவரர் என்பதாகும். மிகப்பெரிய திருவுருவம். கருப்பக்கிருக வாயிலும் மிகப் பெரியது. அப்பர் சுவாமிகள் அகமுருகிப் பாடிய பதிகப் பாடல்கள் நம் சிந்தனைக்கு வருகின்றன. அன்பு செய்து வழிபடுவோரையும் தன்னை அறியாது பொழுது கழிப்போரையும் அவன் அறிவான் என்ற கருத்தமைந்த,

" தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் ருரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே "

என்ற பாடலை ஓதும்போதே நாமும் பக்திசெய்து வழிபட வேண்டும் என்ற உணர்வு தானே வருகிறது.

சுவாமி சந்நிதியைக் கடந்து வெளியில் வரும்போது அர்த்தமண்டபத்தில் உற்சவவிக்கிரகங்களைத் தரிசிக்கலாம். நடராஜர் திருவுருவம் மிக்க அழகுடையது. சுவாமி கோயிலின் வாயிலில் அம்பாள் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலில் இரண்டு அம்பிகை. சுவாமி மணவாள கோலத்தோடு விளங்கும் அடையாளமாக சுவாமி சந்நிதியில் சுவாமிக்கு வலப்பக்கம் நித்தியகல்யாணி என்ற பெயரோடு ஒரு அம்பாளும், வெளிப் பிராகாரத்தில் ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை (கொந்தார்பூங்குழலம்மை) என்ற பெயரில் ஒரு அம்பாளும் உள்ளனர். வெளிப்பிராகாரத்தில் இருக்கும் அம்பாளே பிரதான அம்பிகையாவார். இவ்விரு அம்பாள் சந்நிதிகளையும் தரிசித்து வழிபாட்டை நிறைவு செய்யலாம்.

இறைவன் திருப்பெயர் ஸ்ரீ எழுத்தறிநாதேசுவரர். இப்பெயர் அப்பர்பெருமானால் இவ்வூர்ப்பதிகத்தில் எடுத்தாளப் பட்டுள்ளது. தான்தோன்றியீசர் எனவும் பெயருண்டு. இறைவி திருப்பெயர் ஸ்ரீ கொந்தார்பூங்குழலம்மை. தலமரம் - சண்பகம். தீர்த்தம் - ஐராவத தீர்த்தம்.

புராண வரலாறுகள் :

அகத்தியருக்கு இறைவன் இலக்கணம் உபதேசித்த தலம். "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, அதற்கு இணையாத், தொடர்புடைய தமிழ் மொழியைத் தொல்லுலகம் புகழ்ந்தேத்தக் குடமுனிக்கு வகுத்தளித்தார் கொல்லேற்றுப்பாகர்" என அகத்தியருக்குத் தமிழிலக்கணம் அறிவுறுத்தியதைப் புகழ்ந்து போற்றும் இலக்கியப் பாடல்கள் பலவாகும்.

சிவபெருமான் கணக்கராய்த் தோன்றி கோயிற் கணக்கை அரசனிடம் ஒப்புவித்த தலம். ஐராவதம் பூசித்து அருள்பெற்ற தலம்.

கல்வெட்டு வரலாறு :

இத்திருக்கோயிலில் சோழ மன்னரில் இராசகேசரி வர்மரின் நான்காம் ஆண்டிலும், விசயநகர வேந்தரில்

வீரகம்பண்ண உடையார் காலத்திலும் பொறிக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் சோழ மன்னரின் கல்வெட்டு, அரிஞ்சிகை விண்ணகரம் என்னும் திருமால்கோயில் இன்னம்பரில் இருந்ததையும் தென்னவன் விழுப்பரையனுடைய மனைவி அரிஞ்சிகையால் ஐந்து அந்தணர்களுக்கு அன்னமளிக்க நிபந்தம் அளித்ததையும் கூறுகின்றது. வீரகம்பண்ண உடையார் கல்வெட்டு, துருக்கர் படையெடுப்பால் நாற்பது ஆண்டுகள் இக் கோயில் பூசையின்றி இருந்ததையும் குறிப்பிடுகின்றது. மேற்குறித்த சோழர் கல்வெட்டு இவ்வூரை வடகரை இன்னம்பர் நாட்டு இன்னம்பர் என்று குறிப்பிடுகின்றது.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

One of the most ancient temple of South India. Every stone is replete with history - every image eloquent of holiness, grace and beauty. The place is inspiring - breathing of peace and tranquility.

(Sd.) D. Anjaneyulu.
Regional Officer Directorate of Field Publicity
6—2—77. Govt. of India, Madras 6

* * * *

It was my fortune to have had the Dharshan of the Diety this morning. The temple is being maintained well by the authorities and poojas are being performed on sound sasthra lines. It was indeed a pleasure to have heard the chanting the Mantras on perfectly round lines.

(Sd) O. K. Moorthy,
Director General
Ministry of Home Affairs; New Delhi.

கடிதம்

Tamil Sanskrit and Other Indian Languages Research Institute, Madras - 28.

Prof. P. Thirugnanasambandhan M. A., (Sanskrit). L. T.
Director (Sanskrit Division)

11, Sambasivam Street,
Thyagarayanagar,
Madras 600 017

ஸ்ரீஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்பெருவிழா அழைப்பும், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன குருமகாசந்நிதானத்தின் ஆசியும் கிடைக்கப்பெற்றமைக்கு குருமகாசந்நிதானம் அவர்களுக்கு என் பணிவார்ந்த வணக்கம் உரித்து.

வேதமோடாகமம்மெய்யாம் இறைவன் நூல்களின் சிறப்பைத் தக்காரைக்கொண்டு விழா நாட்களில் தினந்தோறும்பேச வகை செய்தும், அறுவகைச் சமயத்தார்க்கும் அவரவர் பொருளாய் சிவபரம்பொருள் விளங்கும் நிலையை நினைவுபடுத்தும்வகையில், கருத்தரங்கை அமைத்தும், சமயமும் நீதியும் பிணைந்துள்ள பாங்கினை உணர்த்தும்வகையில் சமயத்தலைவர்களையும் நீதிமன்ற நீதிபதிகளையும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கச்செய்தும், நல்லறிஞர்களைப் பட்டிமண்டபம் ஏற்றியும், வழக்காடவைத்தும், கவிபாடச் செய்தும், சமயாசாரியர் சந்தானாசாரியர் ஆகியோரின் தோத்திர சாத்திரங்களை ஆராயுமுகத்தான் சமயச் சான்றோர்களை நெறிப்படுத்தியும், இன்றைய விஞ்ஞானயுகத்தில் இளைஞர் எழுப்பும் வினாக்களுக்கு விடையளிக்குமாறு நல்லாசிரியர் நால்வரை நியமித்தும், பெண்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சிந்தித்தே பதில் கூறவேண்டியிருப்பதால் அதற்கென ஒரு சிந்தனை மேடையை நிறுவியும், சமயத்தையொட்டிய இயலிசை நாடகங்களை நிகழ்த்துவித்தும் பல்லாற்றானும் அன்றாடம் தெய்வ வழிபாட்டிற்கும், சமயப் பயிற்சிக்கும், பேருரைகளுக்கும் தமக்கே உரித்தான பாணியில் பலரையும் பங்குபெறச்செய்துள்ள நமது குருமகாசந்நிதானத்திற்கு யாதுகைம்மாறு செய்யவல்லேம்? அவர்களுடைய திருவடிகட்கு நன்றிப்பெருக்குடன் வணங்குவதன்றி, நாமும் நம்மைச் சார்ந்தோரும் அன்றாட வாழ்க்கையில் தெய்வத்திருநெறியில் தோய்ந்தொழுகக்கடவோம். வளர்க சமயநெறி! ஓங்குக தருமை புகழ்! சூழ்க எங்கும் அரன் நாமமே!

அன்பன்,

பெ. திருஞானசம்பந்தன்.

சிவமூர்த்தங்கள்

"நஜன்"

(36, இதழ் 6, பக்கம் 290 இன் தொடர்ச்சி)

சிவத்யானம்

தத்புருஷம் :

ஓம் தத்புருஷாய வித்மஹே மகா தேவாய தீமஹி
தந்நோ ருத்ர : பிரசோத யாத் ll
ஓம் நமோ பகவதே ருத்ராய பூர்வ முகாய நம :

அகோரம் :

ஓம் அகோ ரேப் யோத கோரேப்யோ கோர கோரதரேப்ய:l
ஸர்வேப்ய : ஸர்வ ஸர்வேப்ய : நமஸ்தேஸ்து ருத்ரருபேப்ய:
ஓம் நமோ பகவதே ருத்ராய தக்ஷிண முகாய நம :

ஸத்யோஜாதம் :

ஓம் ஸத்யோ ஜாதம் பிரபத்யாமி ஸத்யோ ஜாதாயவை
நமோ நம : I
பவே பவே நாதி பவே பவஸ்யமாம் பவோத்பவாயநம : ll
ஓம் நமோ பகவதே ருத்ராய பச்மிம முகாய நம : ll

வாமதேவம் :

ஓம் வாமதேவாய நமோ ஜ்யேஷ்டாய நம:
சிரேஷ்டாய நமோ ருத்ராய நம :
காலாய நம: கரவி கரணாய நமோபல
விகரணாய நமோ பலாய நமோ பலப்ரமதநாய நம: ஸர்வ
பூத தமநாய நமோ மநோந்மநாய நம :
ஓம் நமோ பகவதே ருத்ராய உத்தர முகாய நம : ll

ஈசானம் :

ஓம் ஈசானம் ஸர்வ வித்யா நாமீச்வர : ஸர்வபூதானும்ப்ரும்
ஹாதிபதிர் பிரம்மணாதிபதிர் பிரம்ஹா
சிவோமே அஸ்து சதாசிவோம் ll
ஓம் நமோ பகவதே ருத்ராய ஊர்த்துவ முகாய நம :

ஓம் நமோ ஹிரண்ய பாகவே ஹிரண்ய வர்ணய ஹிரண்ய ரூபாய ஹிரண்ய பதயே அம்பிகா பதயே உமாபதயே பசுபதயே நமோ நம :

காமிகாதி 28 ஆகமங்கள் இறைவனின் ஈசான முகத்திலிருந்து வெளியிட்டவை : காமிகம் யோகசம் சிந்தியம் காரணம் அசிதம் தீப்தம் சூக்ஷமம் ஸஹஸ்ரம் அம்சுமான் சுப்ரபேதம் விஜயம் நிஸ்வாஸம் ஸ்வாயம்புவம் ஆக்நேயம் வீரம் சௌரவம் மகுடம் பூதம் விமலம் சந்தாஞானம் முகபிம்பம் ப்ரோத்கீதம் லளிதம் சிந்தியம் சந்தானம் சர்வோத்தமம் பாரமேசுவரம் கிரணம் வாதுளம் (ஆக 28).

சித்தாந்தங்களாவன காருடம் வாமம் பூத்தருதிரம் பைரவம் மற்றைய நான்கு முகங்களிலிருந்து தோன்றின. இவ்வாகமங்கள் சிவபெருமானின் அங்கங்களாக விளங்குகின்றன. இந்த சதா சிவமூர்த்தி ஸ்படிகநிறம். ஐந்து திருமுகம். சடைமுடி. பத்து திருக்கரங்கள். வலக்கரத்தில் இச்சா ஞானக் கிரியை என்ற மூவிலைச் சூலமும், பராசக்தி ரூபமாக மழுவும், காத்துருவபாவமான கட்கங்களும், வாளும், பீஜாபூரம், வஜ்ரம், அபயம், பாசம், அங்குசம், நீலோத்பலமலர், தமருகம், வரதம், மணி, அக்கினி, நாகம்.

இதை விளக்கும் ஆகமம் :-

பத்மாஸ நஸ்தம் பஞ்சாஸ்யம் ப்ரதிவக்த்ரம் திரிலோசனம்
திருக்கிரியேச்சா விசாலாக்ஷம் ஜ்ஞானசந்த்ர கலான்விதம்
தவளே ஸாநவதனம் பீதம் தத் புருஷானனம்
க்ருஷ்ண கோர முகோபேதம் ரக்தா போத்தர வக்த்ரகம்
ஸுஸ்வேதம் பஸ்சிமாஸ்யைகம் ஸத்யோஜாதம் ஸ்மூர்த்தகம்
நாகோபவீதி நம்சாந்தம் ஜடாகண்டேந்து மண்டிதம்
ஸக்த்ய ஸிபால கட்வாங்கம் வரவ்யக்ர கராம்புஜம்
தக்ஷிணோசாத வாமாஸ்தே டமரும் பீஜபூரகம்
நாகாக்ஷஸூத்ர நீலாப்ஜம் பிப்ராணம் பஞ்சபி : கரை :

மகாசதாசிவத்திற்கு 25 தலைகள். வைத்தீசுவரன்கோயில் விமானம் ஒன்றில் இவரைத் தரிசிக்கலாம்.

நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தீயதீதை முதலிய அபரவிந்து கலைகளும், இந்திகை, தீபிகை, ரோசிகை, மோதிகை, ஊர்த்துவகாமினி என்ற அபரநாதக் கலைகளும், சூக்குமை, அதிசூக்குமை, மிருதை அமிருதை வியாபினி என்னும் பரவிந்து கலைகளும், வியாபிநி, வியோமருபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என்ற பரநாத கலைகளும் சேர்ந்து பரசிவாபேக்ஷயுற்ற திருவுருவே மகாசதாசிவம்.

4. சந்திரசேகரர்

தீர்ந்தன அன்றியே திங்கள் தன்னிடை
ஆர்த்திரு கலையின் அங்கையில் கொளா
வார்த்திடு சடை மிசை வயங்கச் சேர்த்திடில்
சார்ந்தில அவ்வழி தக்கன் சாபமே. — கந்தபுராணம்.

"நீயே கதி" என்று ஒருவன் சரணடைந்துவிட்டால் அவனை எப்படியும் காத்து அருளவேண்டும் என்பது தர்மம். இந்த சரணுகதி தத்துவ விளக்க நூலாக விளங்குவது இராமாயணம். அதற்குச் "சரணுகதிசாஸ்திரம்" என்றபெயரும் உண்டு.

இராவணனது தம்பிவிபீஷணன் இராமனிடம் அடைக்கலம் புகுகிறன்; அவன் என்னவென்றாலும் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவன். எதிரியின் சொந்த தம்பி. ஆகவே அவனைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று இராமர் பக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபித்தனர். அந்த எதிர்ப்புகளிடையே இராமன் தன் முன்னோனுகிய சிபி சக்ரவர்த்தியை நினைக்கிறன்.

ஒரு அம்பு அடிபட்ட புறுவுக்காகத் தன் உயிரையே அர்ப்பணிக்க சிபி முன் வந்தது எல்லோரும் அறிந்தது தான். அபயம் என்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு" என்பதை இராமன் உணர்கிறன். விபீஷணனுக்கு அபயம் அளித்து லங்காராஜ்ய பட்டாபிஷேகத்தையும் செய்து வைக்கிறன்.

இந்த உயரிய தத்துவத்தை விளக்க எழுந்த வடிவமே சந்திரசேகர மூர்த்தம்.

தக்ஷப்பிரஜாபதிக்கு 27 பெண்கள். இவர்களை எல்லாம் சந்திரனுக்கே மணமுடித்துக்கொடுக்கிறன் ஒரு நிபந்தனை பேரில். இந்த 27 பேர்களிடமும் ஒரேவிதமான அன்பைக் காட்ட வேண்டும்: இதுதான் நிபந்தனை. இது நடக்கக்கூடிய காரியமா?

சந்திரன், கார்த்திகை ரோஹிணி என்ற இருவரிடம் அதிக அன்பு காட்டுகிறான். மற்றைய பெண்கள் தந்தையிடம் வந்து முறையிடுகின்றனர்.

தக்ஷனுக்கு மாப்பிள்ளை மீது ஒரே கோபம். சந்திரனின் கலைகள் நாளுக்கொன்றாகத் தேய்ந்து அழியட்டும் என்று சாபமிடுகிறான். சந்திரன் சாப விமோசனத்திற்காக பிரும்மா விடமும் விஷ்ணுவினிடமும் நடையாக நடக்கிறான். அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதற்குள் 14 நாட்கள் கழிந்து விடுகின்றன. கடைசியில் ஒரு கலை இருக்கும்போது கயிலாயத்தை அடைகிறான், சரணாகதி என்று சிவபெருமான் பாதங்களில் விழுகிறான்.

சிவபெருமான் சந்திரனுக்கு அபயமளித்து அந்த ஒரு கலை யுடன் உள்ளவனைத் தன் தலையில் சூடிக்கொள்கிறான். அவன் கலை மீண்டும் வளரவும் அருள்புரிகிறான் தக்ஷன் சாபத்தால் தேய்ந்தும் இறைவன் அனுக்கிரகத்தால் வளர்ந்தும் இந்த ஏற்பாடு அன்றுமுதல் தேய்பிறை வளர்பிறையாக அமுலுக்குவந்தது.

இப்படி சந்திரனைத் தலையில் சூடிய பெருமானைத்தான் பிறை சூடி, சந்திர சேகரன் என்றெல்லாம் பக்தர்கள் அழைத்திருக்கின்றனர்.

(தொடரும்)

பார்வையாளர் குறிப்பு

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு.

ஐயாறன் அடிக்கமலம்போற்றுவான்போந்த திருவோத்தூர் இளமுலைநாயகி இடங்கொண்ட வேதபுரீசுவரர் குடமுழுக்குக் குழுவினருக்கும், அடியார் குழுவினருக்கும் ஆலய அலுவலர் அன்பால் பிணிப்புண்டு வழிபாட்டிற்கு நன்கு உதவியமையை என்றும் மறவோம். தருமையாதீனத்தில் அருளாட்சிபுரியும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்தம்பொன்னார் திருவடிகளைத் தலைமேற் சூட்டி மகிழ்கின்றோம்.

(ஒ-ம்) தி. மு. பச்சையப்பன்
தலைமை ஆசிரியர்.
அரசினர் உயர்நிலைப்பள்ளி, (ஆண்கள்)
பெருங்காட்டூர், செய்யாறு.

ஆஸ்துமாவைக் குணப்படுத்தும் மூலிகை

ஆஸ்துமா நோயைக் குணப்படுத்தும் மூலிகையொன்றை ஏழை மக்களுக்கு திரு. கேசவமோகன்லால் வழங்குகிருர். ராஜஸ்தான் மாநிலத்தில் புகழ் பெற்ற அரசியல் தலைவரும் சமூகசேவைத்தலைவருமான திரு. சாம்புநாத் அவர்களின் பேரராவார் இவர். சன்னியாசி ஒருவர் சாம்புநாத்துக்கு இந்த மூலிகையை வழங்கினர். கடந்த 40 ஆண்டுக் காலமாக இலவசமாகவே அவர் இம்மூலிகையை வழங்கிவந்தார். தன்னலமற்ற இந்தப்பணிகளுக்காக அரசாங்கம் இவருக்கு பென்ஷன் வழங்கி வந்தது. இப்போது சாம்புநாத் அவர்கள் இந்தப் பணியைத் தனது பேரனிடம் ஒப்படைத்துவிட்டு சன்னியாசி ஆகிவிட்டர். அவரது பேரன் இப்பணியைத் தொடர்ந்து செய்துவருகிருர். ஆனல் உன்னதமான இப்பணியைத் தொடர வசதி படைத்தோர் நிதியுதவி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொள்கிருர். மூன்று வேளை இந்த மூலிகை சாப்பிட்டவுடனேயே நீண்டகாலமாகவே ஆஸ்துமாவினல் அவதிப்படுபவர்கள்கூட குணமடைகிருர்கள். இந்தவியாதியினல் அவதிப்படுபவர்கள் மூலிகைக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு ஆங்கிலத்தில் மட்டுமே எழுதவும்.

திரு. கேசவமோகன்லால்
தபால்பெட்டி எண்: 11463,
கல்கத்தா–6

நன்றி. — முரசொலி. 27–5–77.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்.

இந்தக் கற்கோயில் மிகச் சிறப்பான வகையில் நிர்வாகம் செய்யப்பட்டுவருவதைப் பார்க்க என் மனம் தெய்வ பரவசப் படுகிறது.

(ஒ-ம்) பி. ஆழ்வார்.
4—6—77. துணைச் செயலர், சென்னை.

பரம்பரைத் தொண்டு

திரு. எஸ். வி. ரமணி

'புள்ளும் சிலம்பின காண்' என்ற அதிகாலைப் போது; சுவர்க் கோழிகள் எங்கோ ஒன்றிரண்டு கிரீச்சிடுகின்றன. அருணோதயப் போதைக் கூவியழைக்க வேண்டிய சேவல்கள் கூட மனிதர்களைப் போலச் சோம்பேறிகளாக உறங்குகின்றன. மாணிக்கவண்ணர் கோவிலில் உஷத்காலப் பூஜைக்குரிய கண்டாமணி முழங்குகிறது. அந்த மணி ஓசையே மனித மனத்தின் மாசுகளைக் களைந்து இறையொளியை நிரப்புவதாக ஒலிக்கிறது.

பட்டுச்சாமி ஓதுவாருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. வாழ்க்கையிலேயே இன்றுதான், இந்த நேரத்தில் வீட்டில் இருக்கிறார். உஷத் காலப் பூஜைக்குச் சிவாசாரியப் பெருமக்கள் கோயிலுக்கு வருவதற்குள்ளேயே பட்டுச்சாமி ஓதுவார் தூய்மை மினுமினுக்கக் கோயில் வெளிப் பிராகார வாசலில் காத்திருப்பார். கையில் ஜாலரா; வாயில் தேவாரம்; இடையில் ஒரு நாலு முழ வேஷ்டி; முழங்காலுக்குள் தான் இருக்கும். இறுக்கிக் கட்டியிருப்பார். அதைச் சுற்றி வயிற்றில் 'சிவாய நம' என்று அச்சிட்ட பட்டு உருமாலையைக் கட்டிக் கொண்டிருப்பார். பரந்த நெற்றி முழுவதும் கமகமக்கும் திருநீறு பளிச்சிடும். இடது தோள்பட்டைக்கு வலது தோள் பட்டை கொஞ்சமும் அருமல் விபூதிப் பட்டை பளிச்சென்று மின்னும். சற்றே சிவந்து பருத்த தொந்தியிலும் திருநீற்றை இட்டிருப்பார். கழுத்தில் சிவப்புப் பட்டுக் கயிற்றில் கோத்துத் தொங்கும் ருத்திராட்சம்.

"எங்கேங்க கிளம்பிட்டீங்க? ராத்திரி அம்மாம் தூரம் முட்டி மோதிக்கிட்டதும் வீண்தானுங்களா? உங்களுக்குப் பிள்ளை, பெண்டாட்டின்னு பாசமே இல்லியா?"

படுக்கையை விட்டு எழாமல், தலைவிரிகோலமாய், கண்கள் சிவக்கக் கேட்கும் மனைவியைத் திரும்பிப் பார்க்கிறார் பட்டுச்சாமி ஓதுவார். பெரிய கோயிலின் கண்டாமணி மீண்டும் விட்டு

விட்டு முழங்குகிறது. ஓதுவாரின் பழக்கப்பட்ட கால்கள் முன்னே நகருகின்றன.

"எங்கே போறீங்க? நில்லுங்க!" கண்டிப்பாக ஒலிக்கிறது, மனைவி தனபாக்கியத்தின் குரல்.

"என்னை என்ன செய்யச் சொல்றே?"

"தலைக்கெழுந்த பிள்ளை; ஒரே அருமை மவன்; ரெண்டு நாளாகக் காணலை. என்னை என்ன செய்ய சொல்றேன்னு கேக்கறீங்களே!"

"ஆமா."

"உங்களுக்கு எல்லாம் எதுக்குங்க பெண்டாட்டி, பிள்ளை, வீடு வாசல் குடும்பம் எல்லாம்?"

"தப்புத்தான்."

"முதல்லே பையனைத் தேடிக் கொண்டாந்துட்டு ஜால்ராவைத் தட்டிக்கிட்டுக் கிளம்புங்க! கோயிலாம், குளமாம்! பரம்பரை ஓதுவாராம். நீங்க போய்ப் பள்ளியெழுச்சி பாடாட்டி ஒண்ணும் சாமி தூங்கிட்டே இருக்க மாட்டாரு."

"தனபாக்கியம், நீயா இப்படி பேசறே? பரம்பரை பரம்பரையா இறைவனுக்குத் திருமுறைச் சேவை செய்கிற குடும்பம் இது. ஒரு நாள் தவறலாமா? காலைப் பூசை முடிஞ்சதும் ஓடியாறேன், ரெண்டு தேவாரம் பாடிட்டு..."

"பிள்ளை முக்கியமா, தேவாரம் முக்கியமாங்க?"

"முதல்லே தேவாரம்; அப்புறந்தான் பிள்ளை, தனபாக்கியம்"

"இன்னிக்கு விட்டா நாளைக்குப் பாடலாம், தேவாரத்தை. ஒரே பிள்ளை, போனா நாளைக்குக் கிடைப்பானுங்க?"

"அதுவும் அவன் கொடுத்ததுதான், தனபாக்கியம்."

"அவன் ... அவன்! அது யாரு அவன்?"

"அதோ மணி முழங்குதே, அவன்தான். முடியாது! பாலபிஷேகம் முடிஞ்சிருக்கும். அப்பனே, மாணிக்கவண்ணா, மேலும் சோதிக்காதேடா! இதோ வந்துட்டேன்."

மின்னல்போல் பட்டுச்சாமி ஓதுவார் மறைந்துவிட்டார். கோயிலில் ஒவ்வோர் அபிஷேகம் நடக்கும்போதும், அர்த்த மண்டபத்தில் ஓர் ஓரமாக நின்று அந்தத் தலத் தேவாரத்தைப் பாடுவார். முதல் திருமுறையிலுள்ள ஞானசம்பந்தர் அருளிய

'பொடியுடை மார்பினர் போர் விடையேறிப் பூதகணம்புடை சூழ...' என்ற தேவாரத்தைத் தக்கராகப் பண்ணில் தொடங்கினல், சம்பந்தர் தேவாரம் முடிந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய, தேனை யாடிய கொன்றையினனைத் தேவர் கை தொழும் தேவர் பிரானை ...' என்ற தேவாரம் முழுதும் பாடின பிறகு, கடைசியில் பெரிய புராணப் பாட்டைப் பாடும்போது இறைவனுக்குக் கர்ப்பூர ஆரத்தி நடக்கும். கர்ப்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு வண்டமர் பூங்குழலியையும் சேவித்து விட்டு வெளியில் வருவார். மூன்று கால பூஜையும் பட்டுச்சாமி ஓதுவார் தேவாரம் இல்லாமல் இன்றுவரை நடந்ததில்லை. அவர் அநுஷ்டித்த ஆகார அனுஷ்டானங்கள், ஊரில் செல் வாக்கையும் பக்தியையும் வளர்த்திருந்தன. பட்டைச் சோறுகூடத் தோட்டக் கூலியாள் முத்துவேலுவின் மூலம் ஓதுவாரின் வீட்டுக்கு வந்துவிடும்.

ஓதுவார் கோவிலுக்குள் நுழைந்தபோது கர்ப்பூர ஆரத்தி நடந்துகொண்டிருந்தது. 'நமச்சிவாய வாழ்க ... ...' என்ற திருவாசகத்தை ஓதியபடி அப்படியே ஓடிப்போய் இறைவன் சந்நிதியில் விழுந்தார்.

"கண்ணே கண்ணு, ஒண்ணே ஒண்ணு" என்பதுபோல் பட்டுச்சாமி ஓதுவாரின் பிள்ளை இல்லாக் குறையைப் போக்க இறைவன் ஒரே ஒரு பிள்ளையை அளித்திருந்தான் 'கடவுளை நம்பினல் என்றும் கைவிடமாட்டான். நிச்சயம் நமக்குப் புத்திர பாக்கியத்தை அளிப்பான். வீணுகக் கவலைப்படாதே!' என்று எத்தனையோ ஆண்டுகளாக மனைவியைத் தேற்றுவித்தார் ஓதுவார். காலமறிந்து கொடுப்பதில் வல்ல இறைவன், புத்திர பாக்கியத்தை அளித்ததும், ஓதுவாரின் பக்தி முன்னையிலும் மும்மடங்காகப் பெருகியது. தனபாக்கியத்தம்மாள் அடைந்த மகிழ்ச்சிக்கோ அளவில்லை. ஆசையாக அருமையாக 'நமசிவாயன்' என்று திருநாமம் சூட்டினர் ஓதுவார். 'நமசிவாயா' என்று வாயார, நெஞ்சார அழைத்து மகிழ்ந்தார்.

தமக்குப் பின் தம் இறைபணி தொடர, ஒரு மகனை அளித்த ஆண்டவனை நெஞ்சாரத் துதித்தார். ஆண்டவனை நம்பிக் கிட்டத்தட்ட அறுபது வயதைக் கடத்திவிட்டார். வீட்டுக் கவலை, சோற்றுக் கவலை என்று எதையும் இறைவன் அவருக்குக் கொடுக்கவில்லை. ஓதுவாருக்குக் கணீரென்று பெண்களைப் போல் இழையும் சாரீரம். வாழ்க்கையில் கடைப்பிடித்த நியமங்களும் இறை பணியும் மேலும் அந்தச் சாரீரத்தைக் குளுமையாக்கியிருந்தன. திருவாழ்கொளிபுத்தூர், இன்று சிறிய கிராமந்தான் என்றாலும் தேவாரம் பெற்ற திவ்யத்தலம். அந்தக் கோயி

விலுள்ள துர்க்கை மிகுந்த வரப்பிரசாதி. நாலு அடி உயர முள்ள துர்க்கையின் படைப்புச் சிற்பம் பார்ப்போர் உள்ளத்தைப் பிணிக்கும். அம்பிகை வண்டமர் பூங்குழலியும் அழகான திருவுருவம். விஷ்ணுவே பூசித்த மாணிக்க லிங்கத்தை இன்னும் காணலாம்.

ஓதுவார் தினமும் மூன்று வேளையும் கோயிலுக்குப் போய்த் திருப்பணி செய்கிறார். ஒவ்வொரு தடவையும் இறைவன், இறைவி, துர்க்கை என்று ஒவ்வொரு சந்நிதியாகப் போய்த் துதித்துவிட்டே வீட்டுக்குத் திரும்புவார். அடாது மழை பெய் தாலும் விடாது பனி கொட்டினாலும் இரண்டு வேளை ஸ்நானத் தைத் தவறமாட்டார்.

புத்திர பாக்கியத்தை இறைவன் அளித்தானே என்ற மகிழ்ச்சியைவிட, பிள்ளை இனிமையான சாரீர வளத்தைப் பெற் றிருக்கிறானே என்பதில் ஓதுவாருக்கு அபார திருப்தி. 'நம் பணி இடையறாது தொடர வேண்டும் என்பதற்காகவே இறைவன் சாரீர வசதி படைத்த புத்திரனை அளித்திருக்கிறான்' என்று எண்ணி அகமகிழ்ந்தார்.

நமசிவாயனுக்கு ஏழு வயதாகும்போதே சுமார் நூறு தேவாரங்களைக் கற்பித்திருந்தார், ஓதுவார். கோயிலுக்குப் போகும்போதெல்லாம் நமசிவாயனையும் தூக்கிச்செல்வார். அவ னுக்கும் சிறியதாக ஒரு ஜால்ரா வாங்கிக் கொடுத்துத் தாளம் போடக் கற்றுக் கொடுத்தார். அவனும் சூடிகையாக எல்லா வற்றையும் கற்றுக்கொண்டான்.

இந்தச் சமயத்தில்தான் தனபாக்கியத்தம்மாள் ஒரு பிரச்னை யைக் கிளப்பினாள்.

" இந்த ஓதுவார் பிழைப்பு உங்க தலைமுறையோட போயிடட் டும். நம்ம பிள்ளைக்கு வாணும். அவனை நன்னா படிக்கவைச்சுப் பெரிய வேலைக்கு அனுப்பணும் " என்று ஆரம்பித்தாள்.

பட்டுச்சாமி ஓதுவார், மனைவியின் இந்த வாதத்தை ஏற்கா விட்டாலும், "முதல்லே கொஞ்சம் படிச்சிக்கட்டும், தனபாக்கியம். ஆனால் இதைவிட உயர்ந்த வேலை உன் பிள்ளைக்கு வேண்டாம். இதுதான் தலைமுறை தலைமுறையாத் தொடர்ந்து வருது. ஆண்டவனுக்குப் பள்ளியெழுச்சி பாடறதைவிட உயர்ந்தது ஏதாவது உண்டா? முட்டாத்தனமா இப்படி இனிமே பேசாதே!" என்றார் ஓதுவார்.

" எப்படியோ போகட்டும். ஆசையிருக்கிறவரை அவன் படிக்கட்டும். நடுவிலே தடை போட்டுடாதீங்க."

" அது சரி. படிக்கட்டும் " என்று ஓதுவாரும் ஒத்துக் கொண்டார்.

திருவாழ்கொளிபுத்தூரில் இருந்த ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்தான் நமசிவாயன். சூடிகையாகப் படித்தான். உயர்நிலைப் பள்ளியில் படிக்கவேண்டும் என்ற நிலை வந்தபோது, ஓதுவார் முழு மனமின்றியே அவனைத் தஞ்சையில் உயர்நிலைப் பள்ளியில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அங்கே அவருடைய மைத்துனன் இருந்தான். அவன் வீட்டில் தங்கிப் படித்தான். ஒவ்வொரு விடுமுறைக்கும் பிள்ளை வரும்போது ஒரு சுற்றுப் பெருத்து விடுவாள் தனபாக்கியம்.

விடுமுறைக்கு வந்தால் ஓதுவார் பிள்ளையையும் கோவிலுக்கு அழைப்பார், தாம் போகும்போது. " நிதம் என்னப்பா கோயில்லே ? புதுசா என்ன இருக்கு ? நீங்க பாடறதும் பழசு தான். அங்கே இருக்கிற சிலைங்களும் பழசுதான் " என்று கூறிய நமசிவாயத்தைச் சுட்டெரித்து விடுபவர்போல் பார்ப்பார் ஓதுவார்.

" எலே இங்கிலீசு படிப்பு அப்படிப் பேசச் சொல்லுதாடா ? இதாண்டா எண்ணிக்கும் சாசுவதம். அதெல்லாம் கானல் நீருடா ! பரம்பரையா இறைத் தொண்டு செய்து வருகிற குடும்பம்டா இது ! தெரியாம பேசிட்டேன்னு இந்தத் தடவை மன்னிச்சுடறேன். இனிமே ஒருவாட்டி இப்படிக் கிறுக்குத் தனமாப் பேசினே, உனக்கும் எனக்கும் சம்பந்தமே இருக்காது."

" ஆமா, அவன் என்னசொல்லிட்டான், அதுக்காக இப்படி மேலே விழுந்து பிடுங்கிறீங்க ? பிள்ளை, லீவுக்கு வந்திருக்கான். பத்து நாள் குஷியா வீட்டிலே இருந்துட்டுப் போவட்டுமே ! கோயில், குளம்னு எதுக்காக அவனையும் இழுக்கிறீங்க ? அவனுக்கு இதெல்லாம் ஒண்ணும் ஒத்துவராது ! " என்று இடையில் புகுந்து குதறினாள் தனபாக்கியம்.

" அப்படியா ? உன் போதனைதானா ? உருப்பட்டாற் போலத்தான் ! ஆண்டவா ! கொடுத்த பிள்ளையை ஏண்டா அப்பனே, இப்படிக் கொடுத்தே ? சோதனை பண்ணிப் பார்க்கறியா ? எல்லாம் உன் திருவிளையாடல்தானா ? " மேலும் அங்கே நிற்காமல் கோயிலை நோக்கிப் போய்விட்டார் ஓதுவார்.

நமசிவாயனைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை. " நீ நன்னாப் படிச்சுப் பெரிய வேலை பார்க்கணும்டா மகனே ! காரும் பங்களாவுமா இருக்கணும்டா. உங்க அப்பா தரித்திரம் இந்தத் தலைமுறையோட ஒழியணும். ' ஓதுவார் மனைவி ' என்ற பெயரை விட, ' பெரிய ஆபிஸர் தாய் ' என்பதையே விரும்பறேண்டா "

என்று பிள்ளையின் மனத்தில் நாகரிகத்தைப் புகுத்தினுள் தனபாக்கியம். அதன் பலன் நமசிவாயன் நாத்திகனைப்போல் மாறிவிட்டான். ஹிப்பித் தலைமயிர், யானைக்கால் பேண்ட் என்று அவலமாக மாறிவிட்டான். இரட்டை அர்த்தம் தொனிக்கும் சினிமாப் பாட்டோ ஹம்மிங்கோ எப்போதும் அவன் உதடுகளில் தவழ்ந்தன.

ஒருதடவை விடுமுறைக்கு வந்திருந்தபோது பிள்ளையைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டார் ஓதுவார். "கிராப்பு வெட்டிக்கக் கூடவா துட்டு இல்லாமப் போயிடுத்து? முள்ளம் பன்றி மாதிரி தலையை வளர்த்துண்டிருக்கயே? பார்க்கவே சகிக்கலையே! நீ அங்கே படிக்கிறியா அல்லது இந்தத் தறுதலைத் தனத்தைக் கத்துக்கறியா?" "படிப்புக்கும் இதுக்கும் என்னப்பா சம்பந்தம்?" என்று கேட்டான் நமசிவாயன்.

"படிப்போட பண்பும் வேணும்டா. திருட்டுப்பய மாதிரி தலையும் கட்டம் போட்ட லுங்கியும்......"

"போதும், வந்ததும்வராததுமா அவனைப்பிடிச்சுக்கிட்டுது. சின்ன வயசிலே, ஏதோ ஆசையாப் போட்டுக்கிட்டிருக்கான். பத்துப் பேரை பாத்தா ஆசையா இருக்காதா? உங்களுக்குக் கோயிலை விட்டா கதியில்லை!" என்ருள் தனபாக்கியம்.

"இன்னிக்குச் சொல்றேன், அவன் உருப்படப்போறதில்லை; அதுக்கு நீதான் காரணம்" என்று சவால் விட்டார் ஓதுவார்.

"போனுப் போகட்டும். உங்ககிட்ட வந்து நிக்கமாட்டான். வாடா அப்பா, உள்ளே!" பிள்ளையை இழுத்துக் கொண்டு போய்விட்டாள் தனபாக்கியம். சிலையாக நின்று அவர்களைப் பார்த்தார் ஓதுவார்.

திடீரென்று இரண்டுநாள் முன்பு வந்த கடிதம் தனபாக்கியத்தைத் தூக்கி வாரிப்போடச் செய்தது. பட்டுச்சாமி ஓதுவாரின் உடலும் ஒருமுறை குலுங்கியது. தஞ்சையிலிருந்து மைத்துனன் எழுதியிருந்தான். 'நமசிவாயன் படித்த பள்ளியில் ஆண்டுவிழா நடந்ததாகவும், அதில் அவன் சில பாடல்களைப் பாடியதாகவும், தலைமை வகித்த ஒரு சினிமா டைரக்டர் அவனைப் பாராட்டியதாகவும் எழுதி, இரண்டு நாட்களாக அவன் வீட்டுக்கும் வரவில்லை; பள்ளிக்கும் செல்லவில்லை; அங்கே வந்திருக்கிருனு?" என்று அந்தக் கடிதத்தில் கேட்டிருந்தார்

'பிள்ளையைக் காணோம்' என்ற தகவலை அறிந்ததும் ஓவென்று கதறி அழத் தொடங்கிவிட்டாள். 'இங்கே வரவில்லை, எங்கே போயிருப்பான் என்று விசாரித்து எழுது' என்று மைத்துனனுக்குக் கடிதம் எழுதினார் ஓதுவார். தான் படும் அவஸ்தையில் நூறில் ஒரு பங்கு கூடக் கணவர் அநுபவிக்காமல் தாமரை இலைத் தண்ணீர் போல் காட்சியளிப்பதைக் கண்டு தனபாக்கியத்தால் பொறுக்கமுடியவில்லை. அதுவும் அல்லாமல் குளித்து முழுகி ஜாலராவுடன் கோயிலுக்கும் போகிறாரே! உண்மையாகவே புத்திரசோகமிருந்தால் கோயிலில் போய் தேவாரம் பாடமுடியுமா? ஊர் ஊரா, சந்து பொந்து எல்லாம் ஓடிப்போய்த் தேடவேண்டாம்!

"என்ன ஓதுவார், அப்படியே இருக்கீங்க? எழுந்திருங்க கர்ப்பூரத்தை ஒத்திக்கிங்க. நீங்க கவலைப்படாதீங்க. உங்க பையன் நமசிவாயன் சௌக்கியமாத் திரும்பிவர ஆண்டவன் உதவுவான்" என்று தைரியம் கூறி எழுப்பினார் சுந்தரேச சிவாசாரியார். எல்லாம் அவன் செய்யற திருவிளையாட்டுத்தான், ஐயா, செய்யட்டும்."

பட்டுச்சாமி ஓதுவார் கர்ப்பூரத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு கோயிலை வலம் வரத்தொடங்கினார்.

பிள்ளைப் பாசம் தமக்கு மட்டும் இல்லையா? எங்கே போய்த் தேடுவது? யாரைப் போய்க் கேட்பது? விவரம் அறிந்து அவர் தஞ்சையைத் தாண்டிப் போனதில்லை. சென்னை எங்கு இருக்கிறது என்பதுகூட அவருக்குத் தெரியாது. அவர் உண்டு; கோயில் உண்டு என்று இதுநாள்வரை தள்ளிவிட்டார். பிள்ளையைத் தேடிக்கொண்டு எங்கே, எப்படிப்போவது?

வீட்டுக்கு வந்தார். தனபாக்கியம் அடுப்பே மூட்டவில்லை. சமையலறையில் தலைவிரி கோலமாய்ப் படுத்திருந்தாள். ஓதுவார் வீட்டுக்குள் போய் ஒரு தம்ளர் தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அவர் போட்ட கடிதத்துக்கு மைத்துனனிடமிருந்து பதில் வந்தது. அநேகமாய்ப் பட்டணந்தான் போயிருப்பான் என்றும் சினிமாவில் பாடவோ, நடிக்கவோ விரும்பிப் போயிருக்கலாம் என்றும், தெரிந்தவர்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும், மைத்துனன் எழுதியிருந்தான். தனபாக்கியம் கேட்காவிட்டாலும் அவரே அந்தக் கடிதத்தை மனைவியிடம் படித்துக் காட்டினார். அவள் அதைக் கேட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை.

அவ்வூர்ச் சிவாசாரியாரின் பிள்ளை ஒருவன் சென்னையில் ஒரு கோயிலில் இருந்தான். அவனுக்கும் ஓதுவார் கடிதம் எழுதி விசாரித்துப் பார்க்கச் சொன்னார்.

எதற்காக எது நிற்கப்போகிறது? காலம் தன்பாட்டில் ஓடிக்கொண்டேதான் இருக்கிறது. 'நமசிவாயன் எங்கே போனான், என்ன செய்கிறான்?' என்ற விவரமே தெரியாமல் இரண்டு மாதத்துக்குமேல் ஓடிவிட்டன. தடத்திலேயே போய்ப் பழகிவிட்ட செக்கு மாட்டைப் போல ஓதுவாரும் கோயில், வீடு என்று போய் வந்துகொண்டிருந்தார். தனபாக்கியம் விருப்பம் இருந்தால் அடுப்பை மூட்டுவாள்; இல்லாவிட்டால் சுருண்டு படுத்துவிடுவாள்.

பிள்ளை இல்லாக் குறையைப்போக்கப் பிள்ளையைக் கொடுத்த இறைவன் இப்படிப்பட்ட பிள்ளையையா தரவேண்டும்? என்று எண்ணி எண்ணி மறுகினார் ஓதுவார்.

உஷக் கால பூஜை முடிந்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார் ஓதுவார்; தபால்க்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். 'சென்னை, மத்தியச் சிறை' என்று அச்சடித்திருந்த கடித உறையைப் பார்த்ததுமே ஓதுவாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. கைகள் நடுங்க அதைப் பிரித்துப் படித்தார். சிறை அதிகாரி எழுதியிருந்தார்.

'உங்கள் பிள்ளை நமசிவாயன் சென்னைச் சிறையில் இருக்கிறான். விரும்பத்தகாத சூழ்நிலையில் ஒரு கூட்டத்தைச் சிறை பிடித்தோம் அதில் உங்கள் பையனும் ஒருவன். எல்லாரும் ஆயிர ரூபாய் ரொக்க ஜாமீனில் விடுதலை பெற்றுப் போய் விட்டார்கள். உங்கள் பிள்ளைக்கு ஜாமீன் அளிக்க யாரும் முன் வராததால் சிறையில் இருக்கிறான். அவன் கூறியதாலேயே இந்தக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

"நமசிவாயம், உனக்காடா இப்படி ஒரு நிலை? பட்டுச்சாமி ஓதுவார் பிள்ளைக்கா சிறைவாசம்?" என்று அலறியபடியே உள்ளே ஓடி மனைவியிடம் கூறினார். ஓதுவாரின் கைகால்கள் பதறின. உடலெல்லாம் வேர்த்தது.

"குழந்தை சிறையில் அடைபட்டு இருக்கிறானா? யாரு, நம்ம நமச்சிவாயமா? என்று கேட்ட தனபாக்கியம், அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டாள்.

ஓதுவாரின் கைகள் நடுங்கின. மனைவிக்குச் சற்று ஆசுவாசம் செய்துவிட்டு, தம் மைத்துனனுக்கு ஒரு தந்தி கொடுத்தார். "ஏங்க இன்னுமா நிக்கறிங்க? போய் ஜாமீன் கட்டிக் குழந்தையை அழைச்சுக்கிட்டு வாங்க! என்னால் நினைச்சே பாக்கமுடியலேங்க! போங்க உடனே!" என்று படபடத்தாள் தனபாக்கியம். கொஞ்சம் நினைவுவந்ததும், தரையில் கிடத்திய மீனைப்போல் துடித்தாள்.

வாழ்நாளில் என்றுமே தவறாத இறைபணியையும்விட்டு, தம் மைத்துனனுடன் பட்டுச்சாமி ஓதுவார் சென்னைக்குச் சென்றார். கடிதம் எழுதியிருந்த சிறை அதிகாரியைப் போய்ப் பார்த்தார். அவர் விவரமாகக் கூறினார்.

"உங்கள் பிள்ளைக்கு நல்ல சாரீரம். அபாரமாகப் பாடியிருக்கிறான். அவன் பாட்டைப் புகழ்ந்த சினிமா டைரக்டர் வார்த்தையை நம்பி அவன் சென்னைக்கு ஓடிவந்துவிட்டான். சென்னை வந்ததும் அந்த டைரக்டரைப் போய்ப் பார்த்திருக்கிறான். அவர் உடனே எதுவும் உதவவில்லை. கையிலிருந்த காசு கரைந்து சாப்பாட்டுப் பிரச்னை வந்தபோது சினிமாத் தரகர் ஒருவரின் உதவியுடன் பின்பாட்டுப் பாடும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. அதுவும் எதற்கு? மக்களின் கீழ்த்தர ஆசையைக் கிளறிவிடும் வகையில் பாடி ஆடும் ஒரு பெண்ணின் நடனத்துக்கு! ரிக்கார்ட் டான்ஸ் ஆடும் குழுவில் அவன் பின்னணிப்பாடகனானான். அந்தப் பெண்ணின் நடன நிகழ்ச்சி ஒன்று ஓட்டேரியில் நடந்தபோது, போலீஸ் அந்தக் குழுவை வளைத்துப் பிடித்துவிட்டது. அதில் நமசிவாயமும் மாட்டிக் கொண்டான்.

ஜாமீனைக் கட்டி நமசிவாயனை வெளியில் அழைத்து வந்தார் ஓதுவார்.

"உங்க பணிதான் அப்பா, உன்னதப் பணி! நான் பட்ட அவமானம் போதும்!" என்று ஓதுவார் காலில் விழுந்தான் நமசிவாயன்.

'ஏன், என்ன?' என்று அவர் பையனை எதுவும் கேட்கவில்லை. பசுவைத் தொடர்ந்து வரும் கன்றைப்போல் பணிவுடனும் பாசத்துடனும் தொடர்ந்துவரும் நமசிவாயனைக் கண்ணாரக் கண்டார்.

நன்றி. — கலைமகள், ஜூன் 1977

இலக்கணக் கொத்தில் — — சைவக் கருத்துக்கள்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,

இலக்கண உரைகள் :

செந்தமிழோடு ஒப்பவைத்து நோக்கத்தக்க தொன்மைச் சிறப்பு சிவநெறிக்கும் உண்டு. தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் தொடங்கி, கி. பி. 17 ஆம் நூற்றுண்டின் இறுதி வரை தோன்றி வளர்ந்த இலக்கண நூல்கள் இருபதுக்கும் மேற்பட்டன. எழுத்து, சொல், பொருள் என்ற தொல்காப்பிய அமைப்பு விரிந்து ஐந்திலக்கணமாக மலர்ந்தபோது வேறுபட அமைந்த இலக்கண நூல்கள் பலவும் தோன்றலாயின. இவ்வாறு தோன்றிய இலக்கணங்களுக்கு இளம்பூரணர் காலந் தொடங்கி எழுந்த உரைகள் பலப்பல. அறிவுலகில் சமணர் செல்வாக்கு மிக்கிருந்த காலத்தில், இவ்வாறுன தூய தமிழிலக் கணங்களின் உரைகளில் சமணக் கருத்துக்கள் மெல்ல மெல்ல இடம் பெறலாயின. வேத வழிப்பட்ட சமயஞ்சார்ந்த நச்சினுர்க் கினியர், பேராசிரியர், பரிமேலழகர் போன்ற உரைகாரர்கள் கூட, தத்தம் சமயக் கருத்துக்களை உரையிடைப் பெரிதும் பேச விரும்பியிருக்கவில்லை, சங்க காலத்துக்கு முற்பட்ட தொல் காப்பியத்திற்குப் பிற்காலத்தே தோன்றிய நூல்களை மேற்கோள் காட்டுதல் பொருந்தாது என்ற கோட்பாடு நச்சினுர்க்கினியருக்கு உண்டு. எங்ஙனமாயினும், இலக்கண உரைகள் பெரும்பாலும் சமண சமயக் கருத்துக்களை ஓட்டியும், சமணப் பாடல்களை மேற்கோளாகக் கொண்டும் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

முப்பெரும் ஆசிரியர்கள் :

இந்நிலை மாறி, இலக்கண உரைகளிடையே சைவ - சமயக் கருத்துக்கள் தலை எடுக்கத் தொடங்கின. குமரகுருபரசுவாமிகள் யாப்பருங்கலக்காரிகை உரையிடை எடுத்தாளப் பெறும் பாடல்கள் பலவும் சமணச் சார்புடையனவாகக் கண்டு, அவற்றிற்குச் சைவ - நோக்கில் உதாரணம் காட்டக்கருதி இயற்றிய நூலே 'சிதம்பரச் செய்யுட்கோவை' குமரகுருபர சுவாமிகள் இலக்கண உரை காணுவிடினும் தமிழிலக்கண

உரைகளிடையே சைவ - சமயக் கருத்துக்கள் உரிய இடம் பெறவில்லை என்ற நெஞ்சம் அவர்களுக்கு உண்டு என உணர முடிகிறது. இவ்வெண்ணம் செழிக்க கி. பி. 17 ஆம் நூற்றாண்டு வழி கோலிற்று. இந்நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கணப் பெரும் புலவர் மூவர். இலக்கண விளக்கம் எழுதிய வைத்தியநாத தேசிகர், பிரயோக விவேகம் கண்ட சுப்பிரமணிய தீட்சதர், இலக்கணக் கொத்து ஆக்கிய சாமிநாத தேசிகர் என்பார் அம்மூவர். இம்மூன்று நூல்களுக்கும் ஒரு சிறப்பு உண்டு. நூலாசிரியர்களே தம் நூலுக்கு உரையும் வரைந்தமையே அச்சிறப்பாகும். தம் நூலுக்கு தாமே உரைகண்ட இம்முயற்சி, தங்கள் கருத்தினைச் செம்மை பெற உணர்த்தவேண்டுமென்ற கருத்தில் எழுந்ததே யெனினும், சைவ - சமய நுட்பங்கள் பொதுள இவ்வுரைகள் அமையவேண்டுமென்ற உள்நோக்கமும் இம்முயற்சியில் உண்டு என அறிய முடிகிறது. இவ்வகையில் இலக்கணக் கொத்து ஆசிரியர் சாமிநாததேசிகரின் உரையிடை காணப்பெறும் சைவ - சமய நுட்பங்கள் பேரழகுடன் விளங்குதலைக் காணமுடிகிறது.

இலக்கணக் கொத்தின் ஏற்றம் :

சாமிநாததேசிகர் திருநெல்வேலியில் சைவ - வேளாளர் மரபில் தோன்றி, திருவாவடுதுறையில் துறவு பூண்டு, ஈசான தேசிகர் என்ற தீட்சாநாமத்துடன், திருநெல்வேலி ஈசான மடத்துத்தலைவராய் விளங்கினார். சொல்லிலக்கணத்தின் இன்றியமையாமை உணர்ந்து அரியசெய்திகள்பலவற்றை வேற்றுமை, வினை, ஒழிவு என்ற மூன்று இயல்களில், 131 நூற்பாக்களில் யாத்தனர். உரை நடையால் சொல்லிலக்கண நுட்பங்கள் பலவற்றையும் விளக்கவேண்டுமென்ற இவர்களது உள்ளக் கருத்தே இலக்கணக் கொத்திற்கு சுவைமிக்கதோர் உரையினை வரையத் துணையாயிற்று இலக்கண விளக்க நூலை மறுத்து இலக்கண விளக்கச் சூறாவளி வரைந்த மாதவச் சிவஞான யோகிகளும் சங்கர நமச்சிவாயப் புலவரும் நன்னூல் விருத்தியுரையில், இலக்கணக் கொத்தின் உரைகளைப் பெரிதும் அப்படியே எடுத்தாளுதல் இவரது உரைப் பெருமைக்குச் சான்றாக நிற்கக் காண்கின்றோம். தேவாரத் திருமுறைகளிலும் சைவ - சித்தாந்த சாத்திரங்களிலும் தோய்ந்த சாமிநாத தேசிகரின் நெஞ்சம் சைவ - நுட்பங்களை உரையிடையே விதைத்திருப்பதைக் கண்டு இறும்பூது எய்துகின்றோம். சில அரிய குறிப்புக்களை மட்டுமே இங்கே காணுகின்றோம்.

அரியநூல் மூன்று :

இலக்கணக் கொத்தின் ஏழாம் நூற்பா, இந்நூலைப் பகுத்தறிதற்கு உரிய கரு பத்தினை விரிவாகப் பேசுகின்றது. பத்தாவது கருவியினை இந்நூல்,

“ பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும் ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற விளங்கும் என்ப ”

எனப் பேசுகின்றது. தமிழ் இலக்கண விதிகள் யாவும் தொல்காப்பியம்; திருக்குறள், திருக்கோவையார் என்ற மூன்று நூல்களாலேயே அறியவரும் என்று நூலுரைத்த சாமிநாத தேசிகர், ஏனைய தமிழ்நூல்களைப் பற்றித் தாம் கொண்டிருந்த கருத்தினை இப்பகுதிக்கு அவர் வரைந்த உரைப்பகுதி தெளிவாக விளக்குகின்றது.

“ திரு ‘வைக் கோவைக்கும் கூட்டுக. மாணிக்க வாசகர் அறிவால் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய சிற்றம்பல முடையார் அவர்வாக்கில் கலந்து இரந்து அருமைத்திருக்கையால்எழுதினர். அப்பெருமையைநோக்காதுசிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்கு வேள்மாக் கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடு ஒன்றுக்குவர்.

எனத் திருக்கோவையாரின் ஒப்பற்ற பெருமைகளை விளக்கிய ஆசிரியர், தொல் காப்பியம் மற்றும் திருக்குறட் பெருமைகளை,

“ அங்ஙனமும் அமையாது. இலக்கணமாவது தொல்காப்பியம்ஒன்றுமே; செய்யுளாவது திருவள்ளுவர் ஒன்றுமே; தனிச் சிறப்புடைய இவ்விரண்டும் நீங்கலான இலக்கண - இலக்கியமெல்லாம் ஒன்றற்கு ஒன்று பெருமை சிறுமை இணை என்று கொள்வார் என்பது தோன்ற இம்முறை வைத்து அடையை (திரு) ப் பொதுவாக்கினும்.

என வியப்பர். மேலும் சைவ - சமயச்சார்புடைய இலக்கியங்களின் பெருமைகளைப் பேச வந்த ஆசிரியர் நெஞ்சம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களைக் கூட ஏற்க மறுக்கும் துணிவினைக் காணுகின்றோம்.

> "அவர் அது மட்டோ! இறையனூர் அகப்பொருள் முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணாது, நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணி வாணாள் வீணாள் கழிப்பர்"

இவ்வரிகள் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியன. பத்துப் பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்கள்மேல் ஆசிரியருக்குப் பற்றில்லை என்பது கருத்தன்று. இறையருள் பெற்ற அருளாளர்களின் பெருமைமிக்க நூல்களை உரைகாரர்கள்கூடப் போற்றிக் கொள்ள மறந்தநிலையை எண்ணிய நெஞ்ச வெளிப்பாடே மேற்கண்ட உரைப்பகுதிக்கு அடிப்படை என்பதனை உணர முடிகிறது. இவ்வாறு சமயப் பெருநூல்களைப் போற்றிக்கொள்ளாதாரைக் கண்டிக்க விரும்பும் ஆசிரியர்.

> "அவர் இவைகள் இருக்கவே, அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுள் பிறந்து, அதனுள் வாழும் மீன்கள்; அப்பாலை விரும்பாது, வேறுபலவற்றை விரும்புதல் போல, அவரது இயற்கை என்க".

என உவமை காட்டிச் சாடுகின்றார். உவமை ஆழ்ந்த நோக்குடையது. சமய நூல்கள் பாற்கடல். பாற்கடலை இன்றியமையாதுவாழும் மீன்கள்போன்றாரும் நன்றியுணர்வின்றி, வேறு நூல்களை நாடும் சிறுமை கண்டு ஆசிரியர் நெஞ்சம் குமுறுகின்றது.

சைவ - மரபுச் சொற்கள் :

இவ்வாறு கண்டித்த ஆசிரியர், எவ்வாறெல்லாம் சைவசமய நூல்களையும் நுட்பங்களையும் எடுத்துக் காட்டுக்களில் பயன் கொள்ளலாம் என்பதனைப் பலவாகத் தம் உரையிடையே காட்டுகின்றார். மிகப் பொருத்தமாக இவை அமைவது நமக்குப் பெருமித உணர்வினை நல்குகின்றது. ஏழாம் நூற்பாவின்,

> "தமிழ் விதிக்கு அகப்படாச் சிலவிதி சாற்றினன்
> அவை வடமொழிவிதி என்றே அறிக"

என்ற வரிகட்குத் தாமே உரைகண்ட சாமிநாத தேசிகர் "மொழி பெயர்த்தற்கு வாராத சிலவற்றை அம்மொழியாகவே அறைந்தனன் என்பது தோன்ற 'அகப்படா வடமொழி' என்றார். அவை சைவன், சைவம், பார்வதி, கார்த்திகேயன், காங்கேயன் முதலியன எனக் காட்டினர்.

சிவனை வழிபடுபவன் – சைவன்.
சிவனோடு தொடர்புடைய சமயம் – சைவம்.
பர்வத மன்னன் புதல்வி – பார்வதி.
கிருத்திகை மீன்களின் மகன் – கார்த்திகேயன்.
கங்கையின் மகன் – காங்கேயன்.

மேல் ஆசிரியர் எடுத்துக் காட்டிய 'சைவன்' முதலிய சொற்கள் தமிழ் விதிப்படி அமைந்தவையன்று முதற் சொல், தன்னைச் சேர்ந்த மற்றச் சொற்கள் எல்லாம் நீங்கத்தான் அவற்றின் பொருளைக் கொண்டு சிறிது திரிந்து நிற்றலை வடமொழியில் தத்திதாந்தச் சொல் என்பர். மேற்கண்ட சொற்கள் யாவும் வடமொழி அமைப்பில் புணர்ந்துநின்ற தத்திதாந்தச் சொற்களே யாகும். ஆசிரியர் வேறு ஏதேனும் சொற்களைக் கூட இதற்கு உவமை காட்டக்கூடும். ஆனால் சைவச் சார்புடைய செய்திகள் விளக்கமுற வேண்டுமென்ற அன்பு நெஞ்சம் இத்தகு சொற்களை உவமை காட்டி மகிழ்கிறது.

தர்க்கரீதியில் சைவம் :

சமயச் சொற்கள் சிலவற்றைக் காட்டிய ஆசிரியர், சமயப் பனுவல்கள் சிலவற்றையும் எடுத்தாளுகின்றார். மேற்கூறிய ஏழாம் நூற்பாவில் வரும்

"எளிய விதிகளை யாவரும் அறிவார்
அறிய விதிகளை அறையின் அறிவார் இலை"

என்ற வரிகளுக்கு உரை கூறும்போது, அரிய விதி ஒன்றை எடுத்துக்காட்டால் விளக்கவந்து, அதனை நிறுவ.

"அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல்"

என்ற சிவஞான போத உதாரண வெண்பா வரி ஒன்றினையும்,

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து"

என்ற உமாபதி சிவாசாரியர் அருளிய திருவருட்பயன் குறள் வெண்பா ஒன்றனையும் எடுத்துக்காட்டினர். இவ்வரிய விதியினை உரைநடையில் விளங்கவைக்கக் கருதிய ஆசிரியர் 'இருவர்

மாறுகோள் ஒருதலை துணிதலை' அழகிய எடுத்துக்காட்டு ஒன்றால் விளக்குதல் நயமாக அமைகின்றது.

> "அரியைப் படைத்தலால் அயன் கடவுள் 'என்றும்' அயனைப் பெற்றுக்காத்தலால் அரி கடவுள் 'என்றும் மாறுபட்டுழி', இவ்விருவரையும் அழித்தலால் இவர் கடவுள் அல்லர். அரனே கடவுள் என்பதுபோலச் சில கருவிகொண்டு, இம்முறையால் இது வழு - அம்முறையால் அது வழு - என இரண்டனையும் மறுத்து, அவ்விரண்டற்கும் வேறாகி வழுவற்றது ஒன்றனைத் தழுவுதலும்போல்வன என்க"

என்ற உரைப்பகுதியில் இலக்கண நுட்பம் ஒருபால் விளங்க, முழுமுதற் கடவுள் சிவபிரானே என்பது பிறிதொருபால் வற்புறுத்தப்பெறுவது நெஞ்சில் நிறைகிறது.

சிவபிரான் திருவுருவம் :

சிவபரம்பொருளின் திருமேனிபற்றிய விளக்கங்களையும் ஆசிரியர் பலவிடத்துப் பேசுகின்றார். ஆறும் நூற்பா உரையில், சொல்லின் ஒற்றுமை வேற்றுமை நயங்களை விளக்க "சொல்' 'அர்த்தநாரீசுரன்' போல வேற்றுமைக்கும் ஒற்றுமைக்கும் பொது" என இறைவன் அம்மையும் அப்பனுமாகிய நிலையில் இருவராகவும், சிவசக்தியை ஒன்றாகக் காணும்போது ஒருவனாகவும் நிற்றலைச் சைவ - சமய நுட்பத்தோடு விளக்குகின்றார். பத்தொன்பதாம் நூற்பாவின் உரையில்

> "அவன்கண் பதினைந்து; அவன் தலை ஐந்து; நெற்றிக்கண் நெருப்பு ..."

என உருவத் திருமேனித் திறத்தினை உவமையாக வியக்கிறார். சிவபெருமானைக் கண்மலரால் பூசித்துச் சக்கரப் படைபெற்ற திருமாலைக் கூறுவார் போல ஆறு வேற்றுமை உருபுகளையும் ஒரே தொடரில் நிரல்பட சுருக்கிக் காரக உதாரணம் கூறும் சாமிநாததேசிகரது சைவ - நெஞ்சம் வணக்கத்துக்குரியதாகிறது

> "நாரா யணன்பூ ஒரா யிரத்தைக்
> கரத்தால் கொய்து அரற்கே கொடுத்துச்
> சக்கரச் சிறுமையின் நீங்கி நற்சுவைப்
> பாற்கடல் கண்ணே பள்ளி கொண்டான்"

என்பது உவமைப் பாட்டு. (தொடரும்)

பிரார்த்தனை*

டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் சுல்ஸ்பர்கர், கடவுள் நம்பிக்கை இல்லாதவர். எனினும் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பிரார்த்தனை பற்றிய அறிஞர்களின் அனுபவங்களையும், விளக்கங்களையும் தன் சொந்த வாழ்க்கைக்காகத் தொகுத்துக் கொண்டு வந்திருக்கிறார். சிகாகோ டிரிபியூனில் பிரார்த்தனை பற்றிய உள்ளத்தைத் தொடும் கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்.

"பத்திரிகை நிருபன் என்ற முறையில் தலைவர்களிலிருந்து சாதாரண பிரஜைவரை, அரசிகளிடமிருந்து விபசாரிகள் வரை முட்டாள்களிடமிருந்து ராஜதந்திரிவரை, மனித வாழ்க்கையைக் கணிப்பதே, கூர்ந்து நோக்குவதே என் தொழிலாக இருந்து வந்திருக்கிறது. அந்த நிலையில், மனித இனத்தின் அடிப்படை ஆசைகளும் வேண்டுகோள்களும் பிரார்த்தனை ரூபமாக வெளிப்படுவதை எந்த எழுத்தாளன் கவனிக்காமல் புறக்கணிக்க முடியும்?

துயரம் மேவும்போதோ, நன்மை தேவைப்படும்போதோ, அல்லது அந்த மகத்தான சக்தியின் இயக்கங்களைக் கண்டு தன் பாராட்டுக்களைத் தெரிவிக்கும் முகமாகவோ, மனிதன் பயத்தினாலோ, ஆசையினாலோ பிரார்த்தனை செய்கிறான். அவை மனிதனது சுய ஆறுதலுக்கு, மன நிம்மதிக்குப் பயன்படுகின்றன. மனிதன் உண்டாக்கியவற்றுள் பிரார்த்தனை ஓர் அற்புத சிருஷ்டி என்பேன்.

இவ்வுலகில் எத்தனையோ விஷயங்களை மனிதன் புரிந்து கொள்ள முடிவதில்லை. இதன் விளைவாகத் தோன்றும் மரியாதை, பிரார்த்தனை வடிவமெடுக்கிறது. என்னைப் போன்ற ஒரு கடவுள் நம்பிக்கையில்லாதவன் பிரார்த்தனையைப் பற்றி ஒரு நாற்பதாண்டுக்காலமாக தகவல்சேகரித்து வருவது உங்களுக்கு விசித்திரமாகப்படலாம். ... ...

---

* பிரார்த்தனை என்ற கட்டுரையின் ஒரு பகுதி இவ்விதழில் வெளியிடப் பெறுகிறது.

கிருஸ்துமத புரட்சியாளர் மார்ட்டின்லூதர் கூறுகிறார்: "காலையிலும் மாலையிலும் செய்ய வேண்டிய முதல் வேலையாகப் பிரார்த்தனையை வைத்துக்கொள்வது நல்லது. 'எனக்கு இப்போது நேரமில்லை ஒருமணி கழித்து, பிறகு செய்கிறேன், என்று உன்னை நீ ஏமாற்றிக் கொள்ளாதே. அத்தகைய மனிதன் பிரார்த்தனையைவிடத் தனது தொழிலையும் வியாபாரத்தையும் முதலாவதாகக் கருதுகிறான். அதன் பிடிகளில் பின்னால் சிக்குண்டு தவிக்கிறான்."

மகத்தான ரஷ்ய எழுத்தாளர் டாஸ்டாவ்ஸ்கி வாழ்க்கையின் திறவுகோலாக அன்பைக் காண்கிறார். "கடவுளின் படைப்பு அனைத்தினிடமும அன்பு செலுத்துங்கள். ஒவ்வொரு மணலையும் ஒவ்வோர் இலையையும், ஒவ்வோர் ஒளிக்கீற்றையும் அன்புடன் நோக்குங்கள். விலங்குகளை, தாவரங்களை ஒவ்வொன்றையும் நேசியுங்கள். அப்போது அதனுள் விளங்கும் கடவுள் தன்மை என்ற புதிர் உங்களுக்குப் புலனாகும். அது புரியும்போது நீங்கள் நாளும் வளர்வீர்கள். பின், உலகம் பூராவையும் நேசிப்பது உங்களுக்கு எளிதாகும். அப்போது இவ்வுலகை - இப்பிர பஞ்சத்தை அன்பு ஒன்றுதான் பிணைத்திருக்கிறது என்பதை உணர்வீர்கள்."

சாக்ரடீசின் மாணவர் கூறுகிறார்: "ஆண்டவனே, என் ஆத்மாவை அழகுபடுத்து; எனது உள் உலகமும் புற உலகமும் ஒரே சுருதியில இயங்கட்டும்."

பிரார்த்தனை என்றால் என்ன என்பதைத், தான் அறிந்த அனுபவத்தில் எழுதுகிறாள் ஒரு யூதச் சிறுமி. ஹிட்லரின் கொடுமை கட்கு ஆளாகி, சிறையில் தனது கடைசி நாட்களைக் கழித்தபோது தன் டயரியில் அவள் எழுதியிருக்கிறாள்:

பயப்படுபவர்களும், தனிமையில் வாடுபவர்களும் சந்தோஷமில்லாது துக்கத்தில் வாழ்க்கை நடத்துபவர்களும் தங்கள் கூட்டை விட்டு வெளியே செல்லவேண்டும். அந்த வெளி உலக அமைதியில் ஆண்டவனுடன், சுவர்க்கத்துடன், இயற்கையுடன் ஐக்கியமாவதை அவர்கள் உணர்வார்கள். எளிமையான இயற்கையின் அழகில் உலகை, மகிழ்வுடன் வாழ்வதற்காகவே கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை அப்போது உணர்வார்கள்.

இயற்கையின் அழகில் தனிமையில்மனத்தைப் பறிகொடுத்து ஐக்கியமாகும்போது எந்தக் கஷ்டம் வந்தபோதிலும் துக்கத்துக்கு ஆறுதல் கிடைக்கிறது. நன்றி.

— ஆனந்தவிகடன், 10—10—76

உ

சிவமயம்

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்.

சீகாழி வட்டம் - தஞ்சை மாவட்டம்.

திருவிளக்கு அறக்கட்டளைநிதி

மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரம்

1 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளை
தருமையாதீனம் தருமபுரம் ரூ. 1000.

2 ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள் ... 1000.

3 ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
வைத்தீசுவரன்கோயில் ... 1000.

4 திரு. சதாசிவம், லண்டன். ... 1000.

5 பெரியநாயகம் சதாசிவம், லண்டன் ... 1000.

6 திரு. ஆர். வி. செல்வராசு செட்டியார், பண்ணுருட்டி. ... 1000.

7 திருமதி. கே. ஞானம்பாள், சென்னை ... 1000.

8 திரு. என். எம். பொன்னம்பலம் பிள்ளை
நெ. 2, கனகசபை நகர், சிதம்பரம் ... 1000.

9 திரு, கே. ஜெயராமன், மானேஜிங் டிரஸ்டி,
ஸ்ரீ சங்கர மடம், சென்னை ... 1000.

10 திரு, எஸ். பத்மநாபன், சேஷாயி நகர் திருச்சி ... 1000.

11 திரு. வி. வைத்திசுப்பிரமணியஐயர், மானேஜிங்டிரஸ்டி
இடையாத்தமங்கலம், அவிபக்தவைத்தியநாதய்யர்
டிரஸ்ட், சென்னை ... 1000.

12 டாக்டர். திரு. ஜி. பாலசுப்பிரமணியன்
ரெங்கநகர், ஸ்ரீரங்கம் ... 1000.

13 திருமதி. குமுதவல்லி, திரு. ஆர். சண்முகம்
அண்ணாநகர் சென்னை - 40. ... 1000.

14 திரு. கே. பி. செல்லத்துரை
செல்வம் சைக்கிள் & ரைஸ்மில் ஸ்டோர்ஸ்,
நெல்லையப்பர் ஹைரோடு, திருநெல்வேலி. .. 1000.

15 திரு, ஜே. தைலக்கவுண்டர், வியாபாரம்
இடப்பாடி, சேலம் மாவட்டம். ... 1000.

16 திரு. எஸ். கிருஷ்ணன், எஸ். சித்தநாதன் & சன்ஸ் பழநி 1000.

17 முதல் 22 வரை உண்டியல் நிதி தலா ... 1000.

23 திரு. கே. கே. நடராஜய்யர், வியாபாரம்
இரட்டைமால்தெரு, திருச்சி ... 1000.

24 ஸ்ரீ விஜயா டிரான்ஸ்போர்ட்ஸ், கோயம்புத்தூர். ரூ. 1000.
25 திருமதி. ஏ ஆர். எஸ். காமாட்சி அம்மாள்
திரு. கா. பெ. ஏ. ஆர். சுந்தரம் செட்டியார் மாயூரம். ... 1000.
26 திரு. தியாகராஜ முதலியார், திருக்களம்பூர். ... 1000.
27 திருமதி. பவானி கிருஷ்ண நாயர், எர்ணாகுளம். ... 1000.
28 பட்டு பரிவட்டம் விற்றுமுதல் ... 1000.
29 திரு. வி. என். ஆறுமுகம், சென்னை ... 1000.
30 திரு. கே. பசுபதி, சென்னை ... 1000.
31 திரு. எஸ் கோவிந்தசாமிப் பிள்ளை,
வைத்தீஸ்வரன்கோயில் ... 1000.
32 திருமதி. எஸ் லட்சுமி, திருச்சி ... 1000.
33 திரு. பி. ஜி. சீனிவாசன், மைலாப்பூர், சென்னை ... 1000.
34 திரு. வி. நாராயணசாமி, செகந்திராபாத் ... 1000.
35 திரு. எம். எஸ். இராமமூர்த்தி, அசோக்நகர், சென்னை ... 1000.
36 திரு. எம். எஸ். எஸ். மணி, கோயம்புத்தூர் ... 1000.
37 திரு. எஸ். சுப்பிரமணியஐயர், மாயூரம் ... 1000.
38 திரு. கே. இராமச்சந்திரன், சென்னை ... 1000.
39 முதல் 44 வரை உண்டியல் நிதி தலா ... 1000.
45 திரு ஏ. ரெங்கநாதன், குவைத் ... 1001.
46 திருமதி. வீ. சுந்தரி, சிதம்பரம் ... 1000.
47 திரு. அனந்தபூபதி நாயக்கர், சென்னை ... 1000.
48 திருமதி. எம். ஆர். விஜயா, சென்னை - 28 ... 1000.
49 திரு எம். கே. முத்துராமலிங்கம் பிள்ளை, மலேசியா ... 1000.
50 திரு. பி. என். சுவாமிநாதன்,
வித்யா நகர், கோயம்புத்தூர் ... 1000.
51 திரு. கே. நடராஜன்,
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பம்பாய் ... 1000.
52 திரு. பி. வி. ராமராவ், ஆழ்வார்பேட்டை, சென்னை ... 1000.
53 திரு. வி. சுவாமிநாதன், கரோல்பாக், நியூடெல்லி - 5 ... 1000.
54 திரு. வி. வைத்தியநாதன், திருச்சி - 2 ... 1000.
55 திரு. டி. எஸ், சுப்பிரமணியஐயர்,
திருவானைக்காவல், திருச்சி - 5 ... 1000.
56 திருமதி. எம். ஆர். இந்திரா,
தியாகராய நகர், சென்னை - 17 ... 1000.
57 திருமதி. கஸ்தூரி தாமோதரன், சென்னை - 17 ... 1001.
58 திரு. எம். எஸ். சுப்பிரமணியன், சென்னை - 17 ... 1000.
59 திருமதி. ஜி. ஏ. ராஜம், வேதாசலநகர், செங்கல்பட்டு ... 1000.
60 திரு. ஆர், வெங்கட்ராமன்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை ... 1000.

செய்திகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயில் ஆகிய ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 29—5—77 முதல் 10 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 29—5—77 அன்று கொடியேற்றமும் 2—6—77 அன்று சகோபுரத்தில் இடபவாகனக் காட்சியும் 4—6—77 அன்று திருக்கல்யாண வைபவமும்; வெள்ளிரதக் காட்சியும் 6—6—77 அன்று திருத்தேர்த்திருவிழாவும் 7—6—77 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ நாதஸ்வர இன்னிசையுடன் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா நடைபெற்றது. திருவீதியுலாவின்போது வேத சிவாகம பாராயணமும் தக்க பக்கவாத்தியங்களுடன் திருமுறை இன்னிசைப் பாராயணமும் நடைபெற்றன. பக்தர்கள் பலர் வழிபட்டும், இன்னிசை முதலியவற்றைக் கேட்டும் பயன் பெற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜைப் பெருவிழா 7-6-77 செவ்வாய்க்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானைத் தரிசித்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாசி பெற்றுர்கள். குன்றக்குடி, மதுரை முதலிய ஆதீனங்களிலிருந்து அடியவர்களும் சைவ மெய்யன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்து கொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விபூதிப் பிரசாதம் முதலியன வழங்கி ஆசியருளினுர்கள்.

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஜீவ சமாதி கூடிய ஆலயமாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும் ஸ்ரீ ஞானம்பிகை அம்மைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஆராதனைகளின்போது

திருமுறைப் பாராயணம் செய்யப்பெற்றது. வழிபாட்டின் நிறைவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகளுக்கும் வழிபாட்டிற்கு வந்திருந்த பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். 8—6—77 புதன்கிழமை பட்டணப்பிரவேசத்தன்றும் முறையாக வழிபாடுகள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. அன்று காலை ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில் அஷ்ட கஜபூஜை சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. வழிபாட்டிற்குப் பின்னர் மாகேஸ்வர பூஜை சிறப்பாக நிகழ்ந்தது.

குருமூர்த்த தரிசனம் :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா நாளன்று காலை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மேலவீதியில் உள்ள குருமூர்த்தங்களுக்கு எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபாடாற்றினார்கள். மாலையில் நாதஸ்வர இன்னிசை முதலியன முழங்க அடியவர்களும் பக்தர்களும் புடைசூழ காவிரிக்கரைக்கு அருகிலுள்ள குருமூர்த்தங்களுக்கு எழுந்தருளி தரிசனம் செய்தார்கள். ஒவ்வொரு குருமூர்த்தங்களின் அருள் வரலாறுகளின் விளக்கவுரைக்குப் பின்னர் தீபாராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. குருமூர்த்த வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ துர்க்காம்பிகை, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில் தரிசனம் செய்த பின்னர் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு குருபூஜை நாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடு திருமெய்ஞ்ஞானம் நிவேதனத்துடன் நிகழ்ந்தது.

குருபூஜைவிழாவன்றும் பட்டணப்பிரவேசத் திருநாளன்றும் குருவழிபாடு நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களைக் கொலுவில் எழுந்தருளச் செய்து பாவனபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான்சுவாமிகள் அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் பெருமக்களும் பக்தர்களும் வழிபட்டு அருளாசி பெற்றனர்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாத் தொடர்பாகத் தருமையாதீனம் திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில் 29—5—77 ஞாயிற்றுக்கிழமை முதல் 8—6—77 புதன்கிழமை முடிய, திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நாள்தோறும் மாலை 6–30 மணி

முதல் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுத் தொடக்கத்தின் போது தருமையாதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் மாணவர்களாலும், ஆதீனத் திருக்கோயில் ஓதுவாமூர்த்திகளாலும் திருமுறைப் பாராயணம் செய்யப்பெற்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களாலும், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களாலும், மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை, விரிவுரைகள் ஆற்றிய அறிஞர் பெருமக்கள் வரவேற்கப்பெற்றார்கள்.

மாநாட்டில் பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், சிந்தனைமேடை, கருத்தரங்கம், பொம்மலாட்டம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாநாட்டில் அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன் அடைந்தனர்.

நாள்தோறும் சிறப்புரைக்குப்பின்னர் ஆதீனக் கல்வி நிலைய மாணவமாணவியர்களாலும், தருமபுரம்ஸ்ரீஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவியராலும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன, சிதம்பரம், செல்வி. கலைச்செல்வி அவர்களால், சிதம்பரம், வித்துவான். திரு. வா. சுந்தரேசம் பிள்ளை அவர்களாலும் தேவாரப் பாடல்களுக்கு அபிநயம் நிகழ்த்தப் பெற்றது. 8—6—77 பட்டணப்பிரவேசத்தன்று, தருமையாதீன இசைப்புலவர், சீகாழி, திரு. S. கோவிந்தராசன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் திரளாகக் கூடியிருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

சமயப் பயிற்சி வகுப்பு

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழா 7—6—77 செவ்வாய்க்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. இதன் தொடர்பாக 29—5—77 ஞாயிறு முதல் 10 நாட்கள் சமயப் பயிற்சி வகுப்பு நிகழ்ந்தது. சமயப் பயிற்சி வகுப்பின் தொடக்கத்தில் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கியருளினார்கள். தொடர்ந்து சென்னை ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். மகராஜன், பி. ஏ., பி. எல்., அவர்கள் வகுப்பைத் தொடங்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார்கள். நாள்தோறும் காலையில் சிவஸ்ரீ. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் ஆகமம் - சரியாபாதம், கிரியாபாதம், ஞானபாதம், திருவிழாக்கள், கும்பாபிஷேகம், தீக்ஷை, நித்திய பூஜை, ஆலய அமைப்பும் ஊரமைப்பும் என்ற தலைப்புக்களில் திருக்கோயில் வழிபாட்டு முறைபற்றிய கருத்துக்களை விளக்கி விரிவுரையாற்றினார்கள். அறிஞர், பெருமக்கள் பலர் சமய பாடங்கள் நடத்தினர்.

திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் பதி, பசு, பாச இயல்புகள், தத்துவங்கள், அவத்தைகள், முத்திப்பேறு முதலிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கி விரிவுரையாற்றினார்கள். பிற்பகல் வகுப்புக்களில் சிரோமணி, திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் "வேதம், உபாங்கம், பதினெண் புராணங்கள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். ஆனந்ததாண்டவபுரம், திரு. பி. இராமதாச ஐயர் அவர்கள் உபநிடதங்கள், பற்றி விளக்கம் செய்தார்கள். திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் 'பத்ததிகள்' பற்றியும், பண்டார சாத்திரங்கள் பற்றியும், திரு. தெ. ஞான சுந்தரம், திரு. சொ. சிங்காரவேலன், திரு. ந. ரா. முருகவேள் திரு. வி சா. குருசாமிதேசிகர், திருமதி. ப. நீலா, திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர் முறையே திருமுறைகள், சித்தாந்த சாத்திரம், நீதி நூல்கள், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் பற்றியும் விளக்கவுரையாற்றினார்கள்.

8—6—77 புதன்கிழமை மாலை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழாவில் குருலிங்க சங்கம வழிபாடுகளை விளக்கி, குருவை வழிபடச் செல்லும் போதும் இறைவனை வழிபடச் செல்லும்போதும் வெறுங் கையோடு செல்லுதல் கூடாது என்று குறிப்பிட்டு பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி னார்கள். ஆலயத் திருப்பணிமணி திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் தருமையாதீனம் செய்துவரும் சமயப் பணிகளைப் பெரிதும் பாராட்டி உரையாற்றினார்கள். ஆதீன தேவஸ்தான சிவாசாரியப் பெருமக்களும் பிற துறையினரும் வகுப்பில் பங்கேற்றுப் பயனடைந்தனர். பயிற்சியாளர்களுக்கு ஆதீனத்தில் இலவசமாக உணவு உறையுள் வசதிகள் செய்து தரப்பெற்றன. 8—6—77 அன்று மாலை பயிற்சியாளர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து அருளாசி பெற்றனர். பயிற்சி வகுப்பில் இவ்வாண்டு சிவாசாரியர்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பெற்றது. முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. S. மகராசன் அவர்கள் 'நீதிநூல்களும் நீதிமன்றமும்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். குன்றக்குடி திரு வண்ணமலை ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரியசுவாமிகள் சைவ சமயத்தின் கொள்கைகளை விளக்கிச் சிறப்புரை வழங்கினார்கள்.

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில்,

நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள்:

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில், இசை ஞானியார், திருக்குறிப்புத் தொண்டர், திருநாவுக்கரசர், நமிநந்தி

யடிகள், சேக்கிழார், சோமாசிமாற நாயனார் ஆகிய நாயன்மார் குருபூஜை விழாக்கள் முறையே 2, 3, 1, 23 24-5-77 ஆகிய நாட்களில் நடைபெற்றன. திரு V. N. ஆறுமுகம் அவர்கள் பெரிய புராணம் படித்து விளக்கம் செய்தார்கள். திருமுறை பயிலும் மாணவ, மாணவிகளும் அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர்.

திருக்கோவையார் விளக்கவுரை :

தருமையாதீன சமயப்பிரச்சார நிலையத்தில் 2, 23, 30—5—77, ஆகிய நாட்களில் திருக்கோவையார் விளக்கவுரை திரு. N. R. முருகவேள் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டுப் பயன்பெற்றனர்.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :

சென்னை, தருமை யாதீன சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா, 19—5—77 வியாழக் கிழமை மாலை 7-மணி அளவில் நடைபெற்றது. விழா சென்னை தாம்பரம் கிறித்துவக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் 'சித்தாந்த சிகாமணி' திரு. க. வடிவேலாயுதம் M. A. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி திருவுருவப் படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு திரு. N. இராமலிங்கம் திரு. N. இராமமூர்த்தி அய்யர் ஆகியோர் வேளூர்ப்பதிகங்களைப் பாடினார்கள். குமாரி கௌரி சகோதரிகள் நாமாவளிகளைப்பாடினார்கள். விழாத் தலைவர் அவர்கள் வைத்தீஸ்வரன் கோயில் தலச் சிறப்பையும் முருகப்பெருமானின் அருள் விளக்கத்தையும் எடுத்துக் கூறி தருமை யாதீனத்தில் நிகழ்த்தப்பெறும் இந்த விழாவில் எல்லோரும் கலந்துகொண்டு பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சென்னை D S P. திரு. P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் நிலையச் சார்பில் வரவேற்புரை நன்றியுரை கூறியபின் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப் பெற்றது.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையச் சார்பில் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு 29—5—77 ஞாயிற்றுக் கிழமை மாலை சென்னை வன்னிய தேனாம்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ இராமலிங்கேஸ்வரர், ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள், ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் செய்யப்பட்டன.

வழிபாட்டின் போது நிலைய ஓதுவார் திரு. S ஞானப்பிரகாசம் திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பாராயணம் செய்தார்.

வழிபாட்டிற்குப்பின் சமயப் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. சென்னை D. S. P- திரு. P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் நிலையச் சார்பில் வரவேற்புரை கூறினார்கள்.

திரு G. வடிவேலாயுதம் அவர்கள் தமது உரையில் 'சைவர்கள் சமய உண்மைகளைப் புறக்கணிக்காமல் தங்களுக்கு உரிய தான சமயத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ள ஆலய வழிபாட்டில் ஈடுபட வேண்டும். வீடுகளிலும் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பக்தி உணர்வு ஏற்படும்படி செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள்.

தவத்திரு. A. வித்தியானந்தகிரி சுவாமிகள் விரிவுரையின் போது 'குழந்தைகள் பிற்காலத்தில் சிறந்த அறிவாளிகளாக இருக்க வேண்டுமானால் அடிப்படையாக அவர்களுக்கு எப்போதும் சமய அறிவையும் கடவுள் பக்தியையும் ஊட்டவேண்டும். இது குழந்தைகளுக்கு ஆஸ்தீகத் தன்மைகளை ஏற்படுத்தும். கோயில் வழிபாட்டுடன் அடியார்கள்வழிபாட்டிலும் குழந்தைகளை ஈடுபடுத்த வேண்டும்' என்று கூறினார்கள்.

திரு. சிம்மக்குரல் சிதாபதி அவர்கள் 'எந்த ஜீவராசிகளுக்கும் இல்லாத 'மனம்' என்கிற பெரிய பாக்கியத்தை ஆண்டவன் மானிடர்களுக்குக் கொடுத்திருக்கிறான். அந்த மனதைக் கட்டுப்படுத்தி எல்லோரும் ஈஸ்வர வழிபாட்டில் ஈடுபடவேண்டும். குருவழிபாடும் மிகவும் முக்கியமானது. அதையும் புறக்கணிக்கக்கூடாது. இம்மாதிரி வழிபாடுகள் தருமையாதீனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் எல்லோரும் மாதாமாதம் தவறாமல் கலந்துகொண்டு பயனடைய வேண்டும்' என்று தாம் ஆற்றிய உரையில் தெரிவித்தார்கள்.

திரு. E தேவராஜன் அவர்கள் 'மானிடப் பிறவி கிடைப்பது மிகவும் அரிது. மானிடப் பிறவியில்தான் ஆண்டவன் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். அதை உபயோகப் படுத்திக் கொண்டு ஆண்டவனுடைய திருவடியை அடைய முயற்சிக்க வேண்டும்' என்று கூறினார்கள். நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிங்களஹு ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—6—1977 முதல் 15—7—1977 முடிய)

ஸ்ரீ பிங்களஹு வைகாசிமீ 32உ மங்களவாரம் கார்த்திகை நக்ஷத்திரம் பத்திரை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 45 நாழிகை 40 வினடிக்கு மீன லக்னத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சத்தை முன்னிட்டு ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசி சங்கிரமணமாக ஆனி மாதப் பிரவேசம் செய்கிறர். மறுநாள் ஆனிமீ 1உ புதவாரம் ஷடசீதி புண்ணிய காலமாகும். ஆனிமீ 7உ சூரிய உதயம் முதல் 46 நாழிகை 48 விஞடிக்கு சூரிய பகவான் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசம் செய்து மேகாதிபதியை ஏற்படுத்துகிறர். புதபகவான் மேகாதிபதியாவார். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனவது லோகத்தில் சுபிட்சம் நிலவும். இந்தியாவில் வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படும். அரசாங்கத்தில் பிரஜைகள் சௌகரியம் கருதி புதிய சட்டங்கள் நிறைவேறும். நாட்டில் தொழில் நிறுவனங்கள் பலவாக ஏற்பட்டுப் பிரஜைகளுக்கு வேலை வாய்ப்பு உண்டாகும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள குரு மகான்களின் திருவுளபாங்கின் படியாக ஆஸ்திகம் எங்கும்பரவும். தேவாலயங்களில் நித்திய கால பூசைகள் உற்சவங்கள், சிறப்பு, தெய்வ வழிபாடுகள் விமரிசையாக நடைபெற்றுவரும். பிரஜைகளனைவரும் தெய்வ பக்தி யுடையவர்களாக கிரியா மேன்மையுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷ ராசி 9 பாதங்களும் சுப பலனக நடக்கும். தனச் செலாவணி திருப்திகரமாக இருந்துகொண்டிருக்கும். குடும்பத்தில் சுப மங்களம் ஏற்படும். சதா நல்ல வார்த்தை காதில்

விழும். மனம் உற்சாகமாக இருக்கும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் தரும். தெய்வானுக்கிரகத்தினால் எல்லா விஷயங்களிலும் இஷ்டசித்தியை யளிக்கும். சத்துரு ஹீனம் ஏற் படும். தாம்பத்திய வாழ்க்கை சுபமாக நடந்துவரும். புத்திரர் களுக்கு அரசாங்கத்தில் மேன்மை தரும். செய்தொழில்களில் பிரசித்தி ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் வரவும் செலவும் சரி சமனாக இருந்து கொண் டிருக்கும். சகோதரம் மனைவி சம்பந்தமாக செலவுகள் மிகும். பூமி இயந்திரங்களில் சமயோசிதமாக முதலீடு ஆகி அபிவிருத்தி பலன் தென்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பு ஏற்படும். புத்திரர்களுக்கு அரசாங்கத்தில் ஸ்லாக்கிய பலன் தரும். செய்தொழில்கள் புத்தி சாதுரியமாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுன ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடந்துவரும். பண வரவு போஜன சௌகரியம் திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர் தார புத்திரர்களின் நலன் கருதி அடிக்கடி அவசிய செலவுகளையும் ஏற்படுத்தி வரும். சரீரம் உஷ்ணம் பொருந்தி கண் எரிச்சல் குத்தல் சிரோபாதை வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். செய் தொழில் அல்லது உத்தியோகம் சுறு சுறுப்பாக நடைபெற்று வரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடந்துவரும். பண வரவு பெருமதிப்பாக வந்துகொண்டிருக்கும். அதற்குச் சம னாக குடும்பத்தில் சுபச் செலவுகளும் ஆகும். சரீரத்தில் வாத வாயு நரம்பு பிசகுதல் ஏற்பட்டுக்குணமாகும். சனிக்கிரக பிரீதி செய்ய சௌக்கியம் தரும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் ஏற்பட்டுவரும். 16உ க்குமேல் புதிய வாகன பிராப்தியை தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் கம்பீரமாக நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்ம ராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். பணச்செலாவணி பெருமதிப்பாக இருந்துவரும். வாக்கு கௌரவம் போஜன சௌகரியங்கள் திருப்தியளிக்கும். பூமியில் அபிவிருத்தி பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வித்தியா வியாபாரம், வைத்தியம் ஓவியக்கலை ஆகிய வற்றில் முன்னேற்றமாக இருந்துவரும். புத்திரர்களுக்கு உயர்வுதரும். தாம்பத்திய வாழ்வு சாதாரணமாக நடந்துவரும். செய் தொழிலில் காரியங்கள் புனிதமாக செயல்பட்டு வரும். சனி ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வசதி குடும்ப நலம் நன்றாக இருந்துவரும். சகோதரருக்கு உஷ்ண வாத நலிவு வந்து குணமாகும். பூமியில் விவசாயத்தில் சிரமங்கள் தோன்றினும் நன்மைகளை ஏற்படுத்திவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் பிரசித்தமும் அரசாங்க மூலிய நன்மையும் ஏற்படும். பொதுநல சேவையில் நற் கியாதியை ஏற்படுத்தும். மனைவி மைந்தர்களுக்கு சௌக்கிய பலன் தரும். செய்தொழிலில் 19உ க்குமேல் இஷ்டசித்தியை உண்டுபண்ணும். செவ்வாய் புதன் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. தூ. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் ஓரளவிற்கே சௌகரியங்கள் தென்படும். பெண்கள் வகையிலும் கணவன் மனைவியரிடையேயும் மனக் குறைகள் வந்து நீங்கும். சகோதரர்கள் சௌக்கியம் சாதாரணமாக இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும் கோர்ட்விவகாரங்களில் தீர்வு காணாத நிலைமையாகவும் பூர்வ சொத்து இலாப பிராப்தியில் சாதாரண பலனாகவும் இருந்துவரும். இருப்பினும் செய்தொழில் ஆக்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சந்திராஷ்டமம் நீங்கிய வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபம் தரும். குடும்பாபிவிருத்தியில் போதிய வருமானங்களும் போஜன சௌகரியங்களும்

திருப்திகரமாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நல்ல முன்னேற்றம் காணும். பந்து அம்மான்களின் விசுவாசம் அதிகரிக்கும். உஷ்ணத்தால் ஏற்படுகிற சாதாரண நலிவு எதுவும் உடனுக்குடன் வைத்தியத்தால் குணமாகும். தார புத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். செய் தொழில் புத்திசாதுரியமாக நடந்துவரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பொருளாதாரம் சீராக இருந்துவரும். சகோதரர் நலனில் அதிகம் பிரயாசையாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஆதாயமற்ற புகழாக இருந்துவரும். புத்திரரின் நிலைமை உடல் நலம் ஆகியவற்றில் மனோவாட்டம் ஏற்பட்டு முடிவில் சந்தோஷம் உண்டாகும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். செய்தொழில்கள் கண்யக்குறைவின்றி நடந்துவரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வரவு திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர் சகோதரிகளின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலனை ஏற்படுத்திவரும். புத்திர சௌக்கியம் பெண்கள் வகை சுக விருத்தி திருப்திகரமாக இருந்துவரும். பூர்வார்ச்சிதம் ஸ்திரீ வகை சொத்துக்களினால் சௌகரியங்கள் உண்டாகும். கோர்ட் வழக்குகள் வெல்லும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் பேரந்தஸ்து தரும். சனி ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. த.)

கும்பராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் போதிய பண வசதிகள் ஏற்படும். சகோதரர் விசுவாசம் திருப்தியளிக்கும். பூர்வ சொத்து பிராப்தியில் நல்ல அனுபோகங்களையே அளித்துவரும். கால்நடை வாகனபிராப்தி பசு பால் கறவையில் குறைவின்றி நிறைவு காணும். புத்திரரின்

உடல் சிரம் இவற்றில் ரோகம் வந்து குணமாகும். ஞாயிற்றுக் கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில்கள் மனோ தைரிய போக்கில் வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி– ரேவதி.

(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச.சி.)

மீனராசி 9 பாதங்களுக்கும் சௌக்கிய பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவுகள் திருப்திகரமாக வந்து கொண்டிருக்கும். யதார்த்த வார்த்தைகளில் சகோதரர்களுக்கு மனக்குறை வருவதும் உடன் நிவர்த்தி செய்வதும் ஆகும். பந்து அம்மான்களின் சந்தர்ப்ப உதவிகள் இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் பிரயத்தனத்தின்பேரில் ஆதாயம் தரும். புத்திர நலனில் மனோ ஆயாசம் இருப்பினும் முடிவில் நலன் தரும். தாம்பத்திய வாழ்வு சுமுகமாக நடந்துவரும். செய்தொழில்கள் புத்தி சாதுரியமாகச் செயல்பட்டுவரும். புதன் வியாழன் சுபமாகும்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு.

ஐயாறன் அடித்தலம் காணும் பேறு இன்று கிட்டியது. மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் அப்பர்பெருமான் கண்ட தலம் இது. 1971 குடமுழுக்கில் கண்டதுபோல் இன்றும் புதுமை குறையாமல் இந்த ஆலயம் நிமிர்ந்து நிற்கிறது. ஆலயத் தூய்மையிலும், நிர்வாகத்திலும், தருமையாதீன முத்திரை தெளிவாகத் தெரிகிறது. சிவாசாரியர்களும் ஓதுவாமூர்த்தியும் பக்தி சிரத்தையுடன் வழிபாடு நடத்தி வைக்கின்றனர். தருமைக்குரு மணிக்கு எங்கள் வணக்கமும் நன்றியும்.

(Sd) ம. அ. முருகேசன்,

1—1—77. Judicial Officer, Corporation, Madurai.

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" 'என்பதும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம் நாட்டில் வழங்கும் பழமொழிகள். மக்களைத் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டுமென்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல் பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழி காட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத்திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப் பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

பிங்கள ஆனித்திங்கள் 7-ஆம் நாள் (21—6—77) செவ்வாய்க்கிழமையன்று மாத ஜன்ம நட்சத்திரமாதலின் கீழ்க்காணும்திருத்தலங்களில்வழிபாடுசிறப்புறநடைபெறும்.

1. திருவைகாவூரில் காலை மணி 8-00 முதல் 10 வரை ஸ்ரீ வளைக்கைநாயகி உடனாகிய ஸ்ரீ வில்வவனநாதர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும்.

2. கொள்ளிடத்தின் தென்கரைத் திருவிசயமங்கையில் (தேவாரம் பாடிய தலம்) காலை 10 மணிமுதல் ஸ்ரீ மங்கை நாயகி உடனாகிய ஸ்ரீ விசயநாதர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும்.

3. கொள்ளிடத்தின் வடகரைத் திருவிசயமங்கையில் (கோவந்தபுத்தூர்) காலை 10 - மணிமுதல் மங்கள நாயகி உடனாகிய ஸ்ரீ கங்காஜடேசுவரர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும். (பாடல் பெற்றதலம்)

4. திருப்புறம்பயத்தில் மாலை மணி 6 முதல் 7 வரை ஸ்ரீ கரும்படுசொல்லம்மை உடனாகிய ஸ்ரீ சாட்சிநாதர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும்.

இரவு 7 மணி முதல் சமய விரிவுரை :-

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ,

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

பார்வையாளர் குறிப்புக்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம், குறுக்கை.

திருவோத்தூர் இளமுலைநாயகி இடம்கொண்ட வேதபுரீஸ்வரர் குடமுழுக்குக் குழுவினர், தாம் மேற்கொண்ட நற்பணி இனிது முடிவாகவேண்டி, சிவநேசச்செல்வர்களுடன் இனிது போந்து திருக்குறுக்கை வீரட்டானேசுவரரைக் கண்குளிரக் கண்டு தரிசிக்கும் பேறுபெற்றோம். திருத்தலத்தின் நிர்வாக பெருமக்கள் பேரார்வத்தோடு வழிபாட்டிற்கு உறுதுணை புரிந்தமையை என்றும் மறவோம். தருமையாதீனம் அருளாட்சி புரியும் 26 ஆவது குருமகாசந்நிதானத்தின் பொன்னார் திருவடிகட்குப் பாமலர் சூட்டி மகிழ்கின்றோம்.

(S-d) T. P. பச்சையப்பன்,

24—4—77 திருவோத்தூர், செங்கல்பட்டு.

* * * *

சேலம் செவ்வாய்ப்பேட்டை ஸ்ரீ சௌடேசுவரி மாதர் மன்றத்தினர் அறுபான்மும்மையோர் இன்று காலை குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரரையும் ஸ்ரீ ஞானம்பிகைத் தாயாரையும் வழிபடப் பெற்றோம். இத்திருக்கோயிலின் தூய்மை, ஆலய ஊழியர்களின் அன்பரவணைப்பு, தொண்டுள்ளம் வாழ்த்துதலுக்குரியது. தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆட்சிப் பொறுப்பிலுள்ள இத்திருக்கோயிலின் தூய்மை தனிச்சிறப்புடைத்து. எங்களுக்கு நல்ல வழிபாட்டினை உபசாரத்துடன் அளித்தமைக்குக் கடமை உடையோம்.

4—3—77. (S-d) கோ. அ. அப்பாய் செட்டியார்.

குறிப்பு :- இவ்விதழ் 449 முதலாக இருக்கும் பக்க எண்களை 349 முதலாகத் திருத்தி வாசித்துக்கொள்க.